இலவச பிரதி

Registered as a NewsPaper

விலை ரூபா : 10.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-14

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி–03 | 19–09–2005 | திங்கட்கிழமை | ஓசை–214


# கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464

இல:134, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-12760)

# சிறிலங்கா அரசின் கோரிக்கை

# ஐரோப்பியயூனியனால் நிராகரிப்பு

## புலிகள் மீதான தடை குறித்து ஆராய்வு ஒத்திவைப்பு

(பிரஸல்ஸ்)

**சிறிலங்காவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையை அடுத்து விடுதலைப்புலிகளைத் தடைசெய்ய வேண்டுமென சிறிலங்கா அரசு விடுத்த கோரிக்கையை ஐரோப்பிய ஒன்றியம் நிராகரித்துள்ளது. இது குறித்து ஆராய்வதை ஒத்திவைக்க அது தீர்மானித்துள்ளது.**

பிரஸல்சில் கடந்த புதன் கிழமை நடைபெற்ற ஐரோப்பிய ஒன் றிய நாடுகளின் கூட்டத்தில் ஒத்தி வைக்கும் முடிவு மேற்கொள்ளப் பட்டது.

முன்னாள் வெளிவிவகார அமைச் சர் லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையைத்தொடர்ந்து விடுதலைப் புலிகளுக்கு எதிராக சர்வதேச அழுத் தத்தை ஏற்படுத்தும் நோக்கில் இலங்கை அரசாங்கம் பல்வேறு நட வடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

இதன் ஒரு அம்சமாக ஐரோப்பிய ஒன்றியநாடுகள் விடுதலைப்புலி களைத் தடை செய்ய வேண்டும் என்று சிறிலங்கா அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதற்குரிய அழுத்தங்களை இந்தியா, அமெரிக்கா போன்ற நாடு கள் வழங்க வேண்டும் என்றும் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது

(14ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகம் இராணுவ முகாமில் புதிய புத்தர்சிலை அமைத்து வழிபாடு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் காங்கேசன்துறைவீதியில் அமைந்துள்ள இராணுவ முகாமில் புதிய புத்தர் சிலை அமைக்கப்பட்டு வழிபாடுகள் இடம் பெறத் தொடங் கியுள்ளன.513 ஆவது படையணியினர் நிலை கொண்டுள்ள இவ் இராணுவ முகாமில் நேற்று முன்தினம் புதிதாக கட்டப்பட்ட புத்தர் சிலைக்கு வழி பாடுகள் இடம் பெற்றன.பௌர்ணமி தினமான நேற்றுமுன்தினம் திடீரென புத்தர் சிலை அமைந்துள்ள வளவில் புதிய வாசல் அமைத்து அலங்காரம் செய்யப்பட்டு இப் புத்தர் சிலைக்கு வழிபாடுகள் இடம் பெற்றுள்ளது.

தற்போது யாழ்.குடாநாட்டில் எங்கெங்கு இராணுவம் நிலை கொண் டுள்ளதோ அங்கெல்லாம் புத்தர் சிலைகள் திடீர் திடீரென ஊருவாகி வரு கின்றன. (41)

## சர்வதேச ஊடக நேர்காணலுக்கு கடைசி நேரத்தில் சந்திரிகா மறுப்பு

(வோஷிங்டன்)

ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டத்திற்கு சென்ற சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா முதலில் ஊடகங்களுக்கு நேர்காணல் வழங்குவதாக சம்மதித்திருந்த போதும் கடைசி நேரத்தில் அதனை தவிர்த்து விட்டார்.

பி.பி.சி மற்றும் சி.என்.என் தொலைக் காட்சிகளுக்கு நேர்காணல் அளிப்பதாக முதலில் ஒப்புக்கொண்டிருந்த சந்திரிகா குமாரதுங்க அதைக் கடைசி நிமிடங்களில் மறுத்துவிட்டார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் உள் முரண்கள் குறித்த கேள்விகளை எதிர் கொள்ள இயலாத நிலையிலேயே சந்தி ரிகா இந்த நேர்காணல்களை இரத்து செய்ததாகக் கூறப்படுகிறது.

- சு.க. தேர்தல் விஞ்ஞாபனத்தை -

## மகிந்த ராஜபக்ஷ ஏற்கத்தவறின் பதவி நீக்கம் செய்யப்படுவார்?

(கொழும்பு)

சனாதிபதி நாடு திரும்பியவுடன் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை பதவி நீக்கம் செய் யவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் வெற்றி பெறும் நோக்கில் சுதந்திரக் கட்சியின் கொள் கைகளுக்கு முரணான வகையில் ஜே.வி.பி மற்றும் ஜாதிக ஹெல உறுமயக் கட்சிகளுடன் கூட்டணி அமைத்துள்ள பிரதமர் மகிந்த ராஜபக் ஷவை பிரதமர் பதவியில் இருந்து நீக்குமாறு கட்சி முக்கியஸ்தர்கள் பலர் சனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து வருவதாகத் தெரிவிக்கப்படு கின்றது.

சனாதிபதி நாடு திரும்பியவுடன் சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக்கூட்டம் நடைபெறவுள்ள தாகவும் இதில் சுதந்திரக் கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தை மகிந்த ராஜபக்ஷ ஏற்றுக் கொள்ள தவறும் பட்சத்தில் பிரதமர் பதவியி லிருந்து அவரை நீக்குவதற்கு சனாதிபதி திட்டமிட்டுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை கட்சியின் கொள்கைகளை ஏற்க மறுத்தால் மகிந்த ராஜபக்ஷவை கட்சி யின் சனாதிபதி வேட்பாளர் நிலையில் இருந்து வெளியேற்றி விட்டு வேறு ஒரு வேட்பாளரை

(14ஆம் பக்கம் பார்க்க)

## அதிதிகள் இடத்திற்குள் இளைஞர்; கட்டுநாயக்கவில் திடீர் பரபரப்பு

(கொழும்பு)

கட்டுநாயக்க வானூர்தி தளத்தின் பார் வையாளர் தளத்திற்கு வந்திருந்த இளை ஞர் ஒருவர் விசேட அதிதிகள் வருகைதரும் இடத்திற்குள் பிரவேசித்த சம்பவம் நேற்று அங்கு பெரும்பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.


தம்புள்ளவைச் சேர்ந்த 18 வயதான சிங்கள இளைஞரான இவர் பார்வையாளர் தளத்தில் இருந்து கூரையின் மீதேறி விசேட அதிதிகள் வருகைதரும் இடத்திற்குள் பிரவேசித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட அவர், தற்சமயம் விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்.

இவர் கூரையின் மீதேறி விசேடஅதிதி கள் வருகைதரும் தளத்திற்கு பிரவேசித் தமை வானூர்தி தளத்தின் பாதுகாப்பு

(14ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் தியாகி திலீபன் நினைவு நிகழ்வும் "போரும் சமாதானமும்" நூல் வெளியீடும்



(லண்டன்)

தியாக தீபம் லெப்.கேணல் திலீபனின் 18 ஆம் ஆண்டு நினைவு வணக்க நிகழ்வு நேற்று முன்தினம் லண்டனில் நடை பெற்றது.

லண்டன் கிறீன்போர்ட் பகுதி யிலுள்ள அசெம்பிளி மண்ட பத்தில் மாலை 4.00 மணிக்கு நிகழ்வுகள் தொடங்கின.

விடுதலைப்புலிகளின் அரசி யல் ஆலோசகரும், தத்துவாசிரிய ருமான அன்ரன்பாலசிங்கம் அவர் கள் எழுதிய அரசியல் வரலாற்று நூலான "போரும் சமாதானமும்" நூல் நிகழ்வு அரங்கில் வெளி யிடப்பட்டது.

சிறப்பு விருந்தினர்களாக அன்ரன் பாலசிங்கமும் அவரது துணைவியார் அடேல் பாலசிங்க மும் கலந்து கொண்டு சிறப்பித்த னர்.

## ஹெல உறுமய தலைவருக்கு எதிராக சந்திரிகா சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமயவின் தலைவர் எல்லாவெல மேதானந்த தேரருக்கு எதிராக சனாதிபதி சட்ட நடவடிக்கை எடுக்கலாமென தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதமர் கலந்து கொண்ட கூட்டம் ஒன்றில் உரையாற்றிய எல்லாவெல மேதானந்த தேரர் சனாதிபதி நாட்டை பிளவுபடுத்த முயற்சிப் பதாக குற்றம் சாட்டினார்.

சனாதிபதியின் நடவடிக்கைகளை கடுமை யாக விமர்சித்து மேதானந்த தேரர் ஆற்றிய உரை அமெரிக்காவிலுள்ள சனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது. மேதானந்த தேரரின் உரை அடங்கிய ஒலி நாடாவை அமெரிக்கா சென்றுள்ள அமைச்சர்களுடன் சனாதிபதி கேட்டுள்ளார்.

அந்த உரையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்துகளின் அடிப்படையில் மேதானந்த தேர ருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுப்பது தொடர்பாக சனாதிபதி சட்ட ஆலோசனை பெற்றுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது

**நான் என் உயிரிலும் மேலாக நேசிக்கும் உங்களிடம் ஒரு பெரும் பொறுப்பை விட்டுச் செல் கின்றேன். நீங்கள் அனைவரும் பரிபூரண மாகக் கிளர்ந்தெழவேண்டும். இங்கு ஒரு மாபெரும் மக்கள் புரட்சி வெடிக்கட்டும்.**



= தியாகி லெப்.கேணல் திலீபன்

# சாவு அறிவித்தல்

## பொன்னுத்துரை சிவகாமிப்பிள்ளை (பாக்கியம்)

திருகோணமலை திரியாயைச் சேர்ந்த பொன்னுத்துரை சிவகாமிப்பிள்ளை (பாக்கியம்) அவர்கள் 18.09.2005 நேற்று கிளிநொச்சியில் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், காலம் சென்றவர்களான மகாலிங்கம், விவேகானந்தன்,பாலசுந்தரம் மற்றும் அஞ்சலாதேவி (புதுக்குடியிருப்பு), பற்குணராஜா (தம்பலகாமம்), இந்திராதேவி (நிலாவெளி), சாந்திமாலா (ஆசிரியை கொழும்பு), கமலநந்தினி (தமிழீழ கல்விக்கழகம் கிளிநொச்சி), ஆகியோரின் அன்புத் தாயாரும் கண்மணி (முத்துஐயன்கட்டு), சரஸ்வரி (புதுக்குடியிருப்பு), சித்திரா (நிலாவெளி) செல்வராசா (புதுக்குடியிருப்பு) அமிர்தநாயகி (தம்பலகாமம்)இராஜகோபால் (நிலாவெளி) மகேந்திரன் (கொழும்பு) சத்திய மூர்த்தி (எழுதுவினைஞர் கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் 20.09.2005 நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இல 22,வண்ட்றோட் திருநகர் வடக்கில் அமைந்துள்ள அன்னாரது மகளின் இல்லத்தில் நடைபெற்று திருநகர் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறிவினர்,நண்பர்கள், போராளிகள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

*இல. 22*
*பண்ட் றோட் ,திருநகர்,*
*கிளிநொச்சி.* (சி-12864)

தகவல்
திருமதி க.சத்திய மூர்த்தி

# கண்டெடுப்பு

(அலுவலக செய்தியாளர்)

வண்ணேரிக்குளம், கந்தபுரம், புதுக் குடியிருப்புப் பணியில் கடந்த 15ஆம் திகதியன்று ஈடுபட்டி ருந்த மக்கள் பேருந்திலிருந்து தங்கத் திலான காது மாட்டி ஒன்று நடத்து னரால் கண்டெ டுக்கப்பட்டு கரடிப் போக்குச் சந்திக்கரு காமையில் அமைந துள்ள தமிழீழப் போக்குவரத்து உசாவல் பகுதி முகாமையாளரிடம் ஒப்படைக் கப்பட்டுள்ளது. உரித்துடையவர் அலுவலக நேரத்தில் சமுகம் கொடுத்து பெற்றுக்கொள்ளும் வண்ணம் வேண்டப்பட்டுள்ளனர். (சோ)

□ □ □

உருத்திராதேவி (திருகோண மலை) என்பவரது பிறப்பு அத்தாட் சிப்பத்திரம் கண்டெடுக்கப்பட்டு கிளி நொச்சி ஈழநாதம் பணிமனையில் உள்ளது உரியவர் பெற்றுக்கொள்ள வும்.

# சனாதிபதி மாளிகையிலிருந்து விலகியதும் நான் நன்றாகத் தூங்கப் போகிறேன்

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தான் சனாதிபதி மாளிகையிலிருந்து விலகிய பின்னர் தான் நன்கு தூங்கப் போவதாக கூறியுள்ளார். சனாதிபதி பதவியிலிருந்து விலகுவதற்கு பத்து வாரங்கள் உள்ளநிலையில் நியூயோர்க்கிலுள்ள ஆசிய சமூக தலைமை யகத்தில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமெரிக்கக் கிளையில் நடைபெற்ற சந்திப்பொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதன்பின் தனது சகல தலைவலி யும் குணமாகிவிடும் மீண்டும் தான் இசையை ரசிக்க, படங்கள் வரையத் தொடங்கு வேன் எனவும் கூறியுள்ளார். அத்துடன் தான் உலகின் பல பாகங்களிற்குச் செல்லவும் தனது வாழ்க்கை வரலாறை எழுதவும் திட்டமிட்டுள்ளதாகவும் கூறினார்.

# ஓராண்டு நினைவலைகள்

| தாய் மடியில் | | தாய் மண்ணில் |
|---|---|---|
| 13 - 10 - 1983 |  | 16 - 09 - 2004 |

## கப்டன் இளங்கோவன் (இளங்கோ) சுப்பையாகுகநாதன் (நாதன்)

(கிட்டு பீரங்கிப்படையணி - தமிழீழம்)

*தாய்த் தரணியிலே வந்துதித்து*
*தானைத் தலைவன் தரணியிலே*
*தாய்மண்ணைக் காத்திட எழுந்திட்ட*
*புலிவீரா அண்ணை வன் ஆணையிலே*
*பலகளங்கள் நீ கண்டு*
*தாய் மண்ணைக் காத்திட்ட*
*தவப் புதல்வன் நீயடா*
*உன் மக்களை காத்திட*
*வீறு கொண்டு எழுந்திட்ட புலிமறவா*
*திசை தொலைந்து அலைந்தவரை*
*பெருமிதப் படுத்திய திருமுகமே*
*எந்நாளும் உன்னை மறவாத*
*உறவுகள் நாங்கள்*

7/3யூனிற்
முரசுமோட்டை,
பரந்தன். (6719)

என்றும் நினைவுடன்
சித்தப்பா,சித்தி, சகோதரர்கள்.




# கிளி/நுண்கலைக்கல்லூரியில்

இளைய சமூகத்தினரின்
உடல், உள ஆற்றுகைத்திறனை
ஊக்குவிக்கும் நோக்குடன் ஆரம்பமாகின்றது



## தற்காப்புக் கலைப் பயிற்சி நெறி

[கராத்தே-ஷோட்டோக்கான் பாணி]

ஈழத்தின் புகழ் பூத்த தற்காப்புக்கலைப்பேராசான் திரு.ம.இரத்தின சோதி ஆசிரியரும், பிரதம மாணவன் திரு.வள்ளுவன் அவர்களும், பயிற்சி தர இருக்கிறார்கள்.

எதிர்வரும் சனிக்கிழமைக்கு 24.05.2005இற்கு முதல் சேரவிரும்புவோர் பெயர்களை அலுவலக நேரத்தில் வந்து பதிந்து கொள்ளவும்.

செவ்வாய், புதன் ஆகிய தினங்களில் மாலை 3.00 மணிக்கு வகுப்புக்கள் நடைபெறும்.

(சி-12833) –கிளி/நுண்கலைக் கல்லூரியினர்.



# மத்திய கிழக்கு சமாதானம் தொடர்பில் இஸ்ரேலுடன் இணங்கிப் போகத் தயார்

(இஸ்லாமபாத்)

**மத்திய கிழக்கு சமாதானம் தொடர்பில் இஸ்ரேலுடன் இணங்கி செயற்படப்போவதாக பாகிஸ்தானிய சனாதிபதி பர்வேஷ் முசாரப் தெரிவித்துள்ளார்.**



அமெரிக்காவிலுள்ள யூத காங்கிரசின் கூட்டம் ஒன்றில் பங்கேற்ற முஷாரப் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

இதன் மூலம் இஸ்ரேலுடன் இராஜதந்திர சம்பந்தம் எதனையும் கொண்டிராத வகையில் யூதத் தலைவர்களை சந்தித்த முதல் முஸ்லிம் நாட்டு தலைவராக முஷாரப் நோக்கப்படுகிறார். இதேவேளை யூதத் தலைவர்களைச் சந்திக்க முஷாரப் இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையிலான வரலாற்று ரீதியிலான உறவுகளை மீள் பரீசிலிக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

இஸ்ரேலுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் விரைவில் துருக்கியில் பேச்சுவார்த்தை ஒன்று நடத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆப்கான் எல்லைப்பகுதியில் பாரிய இராணுவ நடவடிக்கை

பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் எல்லைப் பிராந்தியத்தில் பாகிஸ்தான் துருப்பினர் புதிய பாரிய இராணுவ நடவடிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

நேற்று முன்தினம் இந்த இராணுவ நடவடிக்கைகள் ஆரம்பமாகி நேற்றும் தொடர்ந்தாக பாகிஸ்தானிய பாதுகாப்பு தரப்பு பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

நூற்றுக்கணக்கான துருப்பினர் யுத்த உலங்குவானூர்திகள் மற்றும் யுத்த தாங்கிகளின் உதவியுடன் இந்த இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரை குறிப்பிடத்தக்க எதிர்ப்பெதுவும் போராளிகளிடமிருந்து வரவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புகையிரதம் தடம் புரண்டது பெண் ஒருவர் பலி; 83 பேர் படுகாயம்

(வோஷிங்டன்)

சிக்காக்கோவில் பயணிகள் புகையிரதம் தடம் புரண்டதில்பெண் ஒருவர் பலியானதுடன் 83 பேர் காயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ரயிலில் ஆயிரம் பேர்வரை பயணித்திருக்கலாம் என்று புகையிரத நிர்வாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த ரயில் தண்டவாளத்தை விட்டு விலகி குடியிருப்பு ஒன்றுக் கருகில் தூக்கி எறியப்பட்டுள்ளது. விமானம்ஒன்று விபத்துக்குள்ளானதைப் போன்ற தொருசத்தம் எழுந்ததாக அங்குள்ள குடியிருப்பாளர்கள் அதிர்ச்சியுடன் தெரிவித்துள்ளனர். தீயணைக்கும் படையினர் காயமடைந்தவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்கள்.

# 30 வருடங்களின் பின்னர் ஆப்கானில் பொதுத் தேர்தல்

(காபூல்)

அரசியல் வன்முறைகள் தொடரும் ஆப்கானிஸ்தானில் முப்பது வருடங்களின் பின்னர் நேற்று பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றுள்ளது.

இத் தேர்தலில் 249 பேர் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்படவுள்ளனர். இதற்காக ஒரு கோடி 25 இலட்சம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இதே வேளை தேர்தலை சீர் குலைக்கும் நோக்கில் தலிபான் குழுக்களின் அச்சுறுத்தல் நாடளாவிய ரீதியில் காணப்படுவதாக ஆப்கானிஸ்தானில் செயற்படும் சர்வதேச செய்தி நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

ஏயில்மன் மாகாணத்தில் அணைக்கட்டு ஒன்றை குண்டு வைத்து தகர்க்க முற்பட்ட தலிபான் உறுப்பினர்கள் 20 பேரை பொலிசார் கைது செய்துள்ளனர்.

இதே வேளை ஆப்கானிஸ்தானை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு அடுத்து வரும் 20 வருடங்களுக்கு சர்வதேச உதவிகள் அத்தியாவசியமானதாகும் என்று ஆப்கானிஸ்தான் சனாதிபதி கமீர்கர்சாய் ஏ.பி.சி வானொலிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இதனிடையே நேற்று அதிகாலை தலிபான்கள் நடத்திய திடீர் தாக்குதலில் மூன்று ஆப்கான் படையினர் கொல்லப் பட்டனர். இரண்டு அமெரிக்கர்கள் காய-மடைந்தனர்.

## ஜேர்மனியில் பொதுத் தேர்தல் பிரதான வேட்பாளரிடையே கடும் போட்டி

ஜேர்மனியின் புதிய அதிபரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று நடைபெற்றது. இந்தத் தேர்தலில் தற்போதைய அதிபர் ஜெகாத் சூடருக்கும் கன்சர்வேட்சி வேட்பாளர் எஞ்சலா மேகலுக்கும் இடையில் கடும் போட்டி நிலவுகின்றது. ஜேர்மனியில் சுமார் 61.7 மில்லியன் மக்கள் வாக்களிக்கும் தகுதியைக் கொண்டுள்ளனர். 1990 ஆம் ஆண்டு இரு ஜேர்மனிகளும் ஒன்றிணைந்த பின்னர் அங்கு நடை பெறும் ஐந்தாவது தேர்தல் இதுவாகும். கடந்த வெள்ளிக்கிழமை வெளியான அபிப்பிராய வாக்கெடுப்பு பேறுகளின் படி கிறிஸ்தவ சனநாயக யூனியன் கட்சியும் அதன் லிபறல் சனநாயக சுதந்திரக் கூட்டணியும் குறைந்த பெரும் பான்மையைப் பெறுமென தெரிவிக்கப்பட்டது. இந்தத் தேர்தலில் கன்சர் வேட்சி வேட்பாளரான ஏஞ்சலா மோகல் வெற்றி பெறும் பட்சத்தில் ஜேர்மனியின் முதலாவது பெண் அதிபராக அவர் விளங்குவார்.

## ஈரானில் அணு உற்பத்தி நடவடிக்கை ஐ.நா. கடினப்போக்கை கடைப்பிடிக்க வேண்டும்

### கொண்டலிசாரைஸ்

(வோஷிங்டன்)

ஈரானில் அணு உற்பத்தி நடவடிக்கைகள் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபை கடினப்போக்கை கடைப்பிடிக்க வேண்டுமென அமெரிக்க ராஜாங்க செயலாளர் கொண்டலிசாரைஸ் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொது அமர்வுகளில் உரையாற்றிய பின்னர் அவர் இதனைத்தெரிவித்துள்ளார்.

இதேவேளை ஈரானில் அணு உற்பத்தி தொடர்பான பிரச்சினைக்கு இராஜதந்திர மட்டத்தில் தீர்வு காண்பதற்கு மேலும் அவகாசம் உள்ளதாக கொண்டலிசாரைஸ் சுட்டிக் காட்டியுள்ளார்.

கடந்த மாதம் முடிவுற்ற ஈரானின் அணு உற்பத்தி தொடர்பான பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுள்ளார். ரைஷின் உரையையடுத்து ஈரான் சனாதிபதி அகமட் நியாட் மறுப்புத்தெரிவித்துள்ளார்.

அணு உற்பத்தி தொடர்பான சர்வதேச பிரகடனத்தை அமெரிக்காவே மீறி வருவதாக ஈரான் சனாதிபதி குற்றஞ் சாட்டியுள்ளார்.

நாட்டு மக்கள் எரிசக்தி தேவைக்காக அணுஉற்பத்தியை மேற் கொண்டுவருவதாக ஈரான் தொடர்ந்து கூறிவருகின்றது.

எனினும் அணுவாயுத உற்பத்தியை மேற்கொள்ளும் நோக்கில் ஈரான் அணு உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாக அமெரிக்காவும், ஐரோப்பிய நாடுகளும் குற்றம் சாட்டி வருகின்றன.

## ஈராக்கில் சக்திவாய்ந்த கார்க்குண்டுவெடிப்பு பாக்தாத்தில் 30 பேர் உடல் சிதறிப் பலி

ஈராக் தலைநகர் பாக்தாத் அருகே நேற்று முன்தினமிரவு சக்திவாய்ந்த கார்க்குண்டொன்று வெடித்ததில் 30 பேர் உயிரிழந்தனர். 40 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

பாக்தாத்திலிருந்து 30 கிலோமீற்றர் தொலைவிலுள்ள நகராபன் என்ற இடத்தில் காய்கறிச்சந்தைகருகில் இக் குண்டு வெடித்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் ஷியாப் பிரிவினையைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்கள் கூறினர்.

# 'கற்றினா' சூறாவளியால் பாதிக்கப்பட்ட நியூஓர்லியன்ஸ் வழமைக்குத் திரும்புகிறது

### ரொய்ட்டர் செய்திஸ் தாபனம் தகவல்

கற்றினா சூறாவளியினால் முற்றாகப் பாதிக்கப்பட்ட நியூ ஓர்லியன்ஸ் நகரத்தில் வர்த்தக நடவடிக்கைகள் மீண்டும் வழமை நிலைமைக்குத் திரும்புவதாக ரொய்ட்டர் செய்திகள் தெரிவிக்கின்றன.

அனர்த்தம் இடம்பெற்று மூன்று வாரங்கள் கழிந்த நிலையில் வர்த்தகர்களுக்கு தமது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்க நியூஓர்லியன்ஸ் நேயர் அழைப்பு விடுத்துள்ளார்.

அடுத்த வாரம் இரண்டு இலட்சம் பேர்வரை தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவதற்கு அனுமதி வழங்கப்படவுள்ளது.

இதேவேளை பாதிக்கப்பட்ட பகுதிகளில் மின்சாரம் குடிநீர் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு வசதிகள் மீண்டும் புனரமைக்கப்பட வேண்டியிருப்பதால் குடியிருப்பாளர்கள் இன்னமும் தாமதமாக இங்கு குடியேறுவது சிறந்ததென்று இடர்காப்பு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான அதிகாரி தெரிவித்துள்ளார்.

நியூஓர்லியன்ஸ் பகுதியில் கற்றினா சூறாவளி தாக்கியதன் பின்னர் சுமார் 800 பேர் வரை உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, உணவோ எதுவித மனிதத் தொடர்புகளோ இன்றி 76 வயதுடைய வயோதிபர் ஒருவர் வீடொன்றில் சிக்கியிருந்த வேளை உயிருடன் மீட்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

மீட்புப் பணியாளர்கள் படகொன்றில் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தவேளை அதிஷ்ட வசமாக இவர் உயிர் தப்பியதைக் கண்டு அதிர்ச்சியுற்றுள்ளனர்.

## பத்திரிகையாளருக்கு எதிரான நேபாள அரசின் போக்கை கண்டித்து பத்திரிகையாளர்கள் ஆர்ப்பாட்டம்

(காத்மண்டு)

பத்திரிகை சுதந்திரத்திற்கு எதிரான நேபாள அரசின் போக்கைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 81 பத்திரிகையாளர்கள் கைது செய்யப்பட்டு பல மணி நேரம் கழித்து விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நேபாளத்தில் ஜனநாயக அரசை அகற்றி விட்டு மன்னர் ஞானேந்திரா மேற் பார்வையின் கீழ் புதிய அரசு செயற்பட்டு வருகிறது. இதற்கு எதிராக மாவோயிட்ஸ்ட் தீவிரவாதிகள் வன்முறையில் ஈடுபட்டு வருகின்றனர். அரசுக்கெதிரான செய்திகள் வெளியிடப்படுவதை அரசு நிர்வாகம் கடுமையாக கட்டுப்படுத்தி வருகிறது. இது பத்திரிகை சுதந்திரத்துக்கு எதிரான போக்கு என்று கண்டனம் தெரிவித்து பத்திரிகையாளர் சங்கங்கள் போராட்டம் நடத்தி வருகின்றன.

தலைநகர் காத்மண்டுவில் ரத்னபார்க் என்ற இடத்தில் கடந்த வெள்ளியன்று காலை நூற்றுக்கணக்கான பத்திரிகையாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை இராணுவத்தினர் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட 81 பத்திரிகையாளர்களும் கடந்த வெள்ளியன்று இரவு தான் விடுதலை செய்யப்பட்டனர். இதற்கு நேபாள பத்திரிகையாளர் சங்கங்கள் கண்டனம் தெரிவித்துள்ளன. ஆசிய பத்திரிகையாளர் சங்கமும் நேபாள அரசுக்கு கண்டனம் தெரிவித்துள்ளது.

காத்மண்டுவில் இருந்து 650 கி.மீ தூரத்தில் உள்ளது டெயிலிக் மாவட்டம். இந்த மாவட்டத்திலுள்ள இராணு வத்தினர் சிறுவர்கள் சிலருக்கு துப்பாக்கிச் பயிற்சி அளித்து வருகின்றனர். இங்குள்ள ஒரு கிராமத்தில் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளை எதிர்த்து போரிட சிறுவர்கள் இராணுவத்தை அவர்கள் தயார் செய்து வருகின்றனர் என்று உள்ளூர் பத்திரிகையில் செய்தி வெளியானது. இதைத் தொடர்ந்து இந்த மாவட்டத்தைச் சேர்ந்த 17 பத்திரிகையாளர்களுக்கும் இராணுவத்தினர் கொலை மிரட்டல் விடுத்தபடியுள்ளனர். தங்களை காப்பாற்றும் படி சர்வதேச பத்திரிகையாளர் சங்கத்துக்கு இந்த 17 பேரும் அபயக் குரல் எழுப்பியுள்ளனர். மேலும் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள 17 பேரும் அந்த மாவட்டத்தை விட்டு வெளியே சென்று விட முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# நீர் விநியோகமின்றி பாரிய நெருக்கடிக்குள் கிளி.மாவட்ட வைத்தியசாலை செயற்பாடுகள்!

## – அவசர நடவடிக்கைக்கு வேண்டுகோள்

(அலுவலக செய்தியாளர்)

**கிளி.மாவட்ட வைத்தியசாலையில் உள்ள கிணற்றில் நீர் வற்றியதன் காரணமாக வைத்தியசாலை வளாகத்தில் பாரிய தண்ணீர்த்தட்டுப்பாடு நிலவி வருவதாகத் தெரியவந்துள்ளது.**

கடந்த சில மாதங்களாக நிலவி வரும் வரட்சி காரணமாக கிளி நகரம் அதனை அண்டிய பகுதிகளில் குடிநீர்த்தட்டுப்பாடு நிலவிவருவதனை அவதானிக்க முடிகிறது. இந்த நிலையில் கிளி.மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் அமைந்துள்ள கிணற்றிலும் நீர்வற்றியுள்ளதால் வைத்தியசாலை வட்டாரத்தில் தண்ணீர்த்தட்டுப்பாடு நிலவியதன் காரணமாக வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வரும் நோயாளர் முதல் வைத்தியசாலை விடுதியில் தங்கியுள்ள வைத்தியர்கள், ஊழியர்கள் வரை பலத்த அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி ஏற்பட்டுள்ளது.

இந்நிலைமை குறித்து கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி கிளி.அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு யாழிலிருந்து நீர்த்தாங்கி வரவழைக்கப்பட்டு வைத்தியசாலைக்கு நீர்வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதுடன் ஓரளவு வைத்தியசாலையில் நிலவி வந்த நீர்த்தட்டுப்பாடு நீக்கப்பட்டது.

வைத்தியசாலைக்கு நீர்வழங்கவென யாழிலிருந்து தருவிக்கப்பட்ட நீர்த்தாங்கி திடீரென பழுதடைந்துள்ளமையின் காரணமாக வைத்தியசாலைக்கு நீர்வழங்குவது தற்போது தடைப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கடந்த ஒன்பதாம் திகதி முதல் வைத்தியசாலைக்கு நீர்த்தாங்கி மூலம் வழங்கப்பட்ட நீர் விநியோகம் தடைப்பட்டுள்ளமை யின் காரணமாக வைத்தியசாலை யில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளர்கள் முதல் விடுதிகளில் தங்கியுள்ள அதிகாரிகள், ஊழியர்கள் வரை பலத்த அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் வைத்தியசாலையில் தற்போது ஏற்பட்டுள்ள இந்த அவல நிலையினை உடன் நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்டவர்கள் ஒரு வாரதபட்சத்தில் வைத்திய சாலை வட்டாரத்தில் தொற்று நோய் பரவுவது தவிர்க்க முடியாததொன்றாகிவிடும் என்பதுடன் வைத்திய சாலையின் செயற்பாடுகள் பெரும் நெருக்கடிக்குத் தள்ளப்படும் ஏது நிலை உருவாகியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(சோ)

# தியாகி திலீபன் நினைவாக பொது மக்கள் சிரமதானம்

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி அரசியல்துறையின் ஒழுங்குபடுத்தலில் லெப் கேணல் தீலிபனின் 18ஆம் ஆண்டு நினைவை முன்னிட்டு வட்டக்கச்சி மத்திய மருந்தகத்தில் கடந்த வியாழனன்று சிரமதானம் இடம்பெற்றது. பிரதேச ரீதியாக நடை.பெறும் இச் சிரமதானப் பணியில் தேசிய எழுச்சிப் பேரவையினர், மாதர் சங்கம், அரசியல்துறைப் போராளிகள்,வைத்தியசாலை, ஊழியர்கள். பொதுமக்கள் என பலதரப்பட்டோர் ஈடுபட்டனர். தொடர்ந்தும் இவ் வைத்தியசாலை வளாகத்தில் சிரமதானப்பணி நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன மற்றும் மாவடி வலயம், மாயவனூர் வலயம், இராமநாதபுர வலயம், ஆகிய இடங்களிலும் சிரமதானப்பணி நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# சக்கர நாற்காலிகள் வழங்கல்

கடந்த காலத்தில் ஏற்பட்ட சுனாமிப் பேரலைத் தாக்கத்தாலும், போர்ச் சூழலினாலும் பாதிப்புக்குள்ளாகி அங்கவீனர்களாக்கப்பட்டவர்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகம் பல்வேறு உதவிகளை செய்துவருகின்றது.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்திலுள்ள பொத்துவில் பிரதேசத்தில் அங்கவீனர்களாக்கப்பட்டவர்களுக்கு அம்பாறை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் கடந்த 13 ஆம் திகதி பிற்பகல் இரண்டு மணியளவில் இரண்டு சக்கர நாற்காலிகள் திட்ட இணைப்பாளர் ஜோன்சனால் வழங்கப்பட்டன.

# திருமலையில் த.பு.க. அனுசரணையில் சிங்களக் குழந்தைகளுக்கு முன்பள்ளி அமைப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் திருகோணமலைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள விஜிதபுர சிங்கள புறநகர்ப்பகுதியில் சிங்களக் குழந்தைகளுக்கென முன்பள்ளி ஒன்று நிறுவப்படவுள்ளது. இதற்கான அத்திவாரக் கல் நாட்டல் கடந்த செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழக [illegible] முன்பள்ளி இணைப்பாளர் [illegible] என். சாஹரிகா தலைமை வகித்தார். திருமலை ரயில் நிலைய பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதீப் ரங்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்ட பிரதிப் பணிப்பாளர் இ. குமரகுருபரனும் பங்குபற்றினார். விஜிதபுர சிங்கள மக்களும் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

அத்திவாரக் கல்லை பிரதம அதிதியான பொலிஸ் பொறுப்பு அதிகாரி எஸ்.எல்.பிரதீப் ரங்க, திருமலை மாவட்டத் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிப் பணிப்பாளர் சி. குமரகுருபரன் நாட்டினர்.

பின்னர் நடைபெற்ற நிகழ்வில் பொலிஸ் அதிகாரி பிரதீப் ரங்க பேசுகையில்; முன்பள்ளிகள் குழந்தைகளுக்கு வாழ்க்கை நெறியைப் போதிப்பவை எனவும், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், சிங்களக் குழந்தைகளின் கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது என்பதை தான் பாராட்டாமல் இருக்க முடியாது. சிங்கள மக்களின் நல்வாழ்வுக்கும், தமிழர் புனர்வாழ்வுக்கழகம் அளப்பரிய சேவைகளைச் செய்து வருகின்றது என்றும் தெரிவித்தார்.

சிங்களவர், தமிழர் என்ற பாகுபாடு நீங்கி, அனைவரும் ஒன்றே என்ற எண்ணம் உருவாக வேண்டும் என்றும் அதற்கு தமிழர் புனர்வாழவுக்கழகம் ஒரு ஊன்றுகோலாக இருக்கின்றது என்றும் பிரதீப் ரங்க தெரிவித்தார்.

மாவட்டப் பிரதிப் பணிப்பாளர் குமரகுருபரன் பேசும்போது; தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மூவின மக்களுக்கும் பாகுபாடுகள் இன்றி மனித நேயப் பணிகளை மேற்கொண்டு வருகின்றது என்றும் அதன் ஒரு அங்கமாகவே கழகத்தின் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையம், சிங்களக் குழந்தைகளுக்காக இம்முன் பள்ளியை நிறுவ நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தார். கழகத்தின் சிங்கள முன்பள்ளி இணைப்பாளர் சாஹரிகாவின் வேண்டுகோளுக்கிணங்க இம் முன்பள்ளி அமைக்கப்படுவதாகவும் குமரகுருபரன் தெரிவித்தார்.

(25)

# திலீபன் மருத்துவமனையின் சிறப்பு நடமாடும் சேவை

திலீபன் மருத்துவமனையின் சிறப்பு நடமாடும் சேவை கடந்த சனிக்கிழமை மாங்குளம் பிரதேச திலீபன் மருத்துவமனை அபிவிருத்திக் குழுத் தலைவர் சி.கருணேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இதில் பொதுச்சுடரினை வைத்திய கலாநிதி திருமதி எழுமதி கரிகாலன் ஏற்ற தேசியக்கொடியினை திலீபன் மருத்துவமனைப் போராளி வண்ணன் ஏற்ற, ஈகச்சுடரினை மாவீரர் நகுலாவின் தாயார் சரஸ்வதி, பெரியபுளியங்குளம் அ.த.க. பாடசாலை அதிபர் திருமதி. நித்தியகலாவும் ஏற்றிவைத்தனர்.

சிறப்புக் கருத்துரைகளை பெரியபுளியங்குளம் அ. த. க. பாடசாலை அதிபர், மாங்குளம் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் நாகமைந்தன் ஆகியோர் வழங்கினர் சுகாதாரகருத்துரைகளை திருமதி.எழுமதி கரிகாலன் நிகழ்த்தி, கண்காட்சி அ[illegible]னை மருத்துவப் போராளி ஈழவாணி நாடாவை வெட்டித்திறந்து வைத்தார். பொது மருத்துவம், குழந்தை மருத்துவம், பற்சிகிச்சை என்பன நடைபெற்றன.

(5)

# மிகச் சிறப்பாக நடைபெற்று முடிந்த முடிவுகள் வவு. வடக்கு கல்வி வலய கல்வி மாநாடு

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா வடக்கு கல்வி வலயம் ஏற்பாடு செய்த கல்வி மாநாடு கடந்த வெள்ளி, சனி ஆகிய இரு தினங்களிலும் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க மண்டபத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

வவுனியா வடக்கு வலயக் கல்விப் பணிப்பாளர் சி.தண்டாயுதபாணி தலைமையில் நடைபெற்ற இக் கல்வி மாநாட்டின் ஆரம்ப நிகழ்வில், வரவேற்புரையினை அதிபர்திருமதி ஆர்.கிருஷ்ணகுமார் நிகழ்த்த, தொடக்க உரையை வடக்கு-கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளர் இ.விசாகலிங்கமும், வவுனியா மேலதிக அரச அதிபர் திருமதி.சாள்ஸ்சும் நிகழ்த்தினர்.

இந் நிகழ்வில் பத்து ஆய்வுத்தலைப்புகளில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் கல்வி பின்னடைவிற்கான காரணங்கள் பல குழு நிலையில் ஆராயப்பட்டு அதற்கான தீர்வுகளும் இம் மாநாட்டில் இனங்காணப்பட்டன.

வவுனியா வடக்கு கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்கள், உதவிக்கல்விப்பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், பிரதி அதிபர்கள், சிரேஷ்ட ஆசிரியர்கள் உட்பட 250இற்கும் மேற்பட்ட பேராளர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

(10)

# முல்லை – செல்வபுரத்தில் ஆறு வீடுகளுக்கு அடிக்கல்

(முல்லைத்தீவு)

சுனாமியினால் வாழ்விடங்களை இழந்த செல்வபுரம கிராம மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் விழா நேற்று முன்தினம் நண்பகல் 12.00 மணிக்கு செல்வ புரத்தில் நடைபெற்றது.

செல்வபுரம் ஊரக மேம்பாட்டுத்தலைவர் போன் சேதுபதி தலைமையில் ஆரம்பமான நிகழ்வில் மங்கல விளக்கினை முல்லை உதவிப்பங்குத்தந்தை திருமகனும்,கியுடெக் வன்னி இணைப்பாளர் அருட்தந்தை பீற்றரும் ஏற்றினர்.தமிழீழத் தேசியக் கொடியினை கடற்புலிகளின் முல்லை நகரத்தளபதி கு.தினேஷ் ஏற்றினர். தொடர்ந்துஆறு வீடுகளுக்குஅடிக்கற்கள் நாட்டபபட்டன.

(20)

# ஆசிரியர்களுக்கு 6மாத கணினிப் பயிற்சிநெறி

திருகோணமலை பொருண்மிய மதியுரையகம் (ரெக்) தனது ஒருவருட நிறைவை முன்னிட்டு ஆசிரியர்களுக்கான ஆறு மாதகால கணினிப் பயிற்சி நெறி ஒன்றினை ஆரம்பிக்கவுள்ளது.

ஒவ்வொரு தொகுதியிலும் பத்துப் பேரை உள்ளடக்கியதாக இருபது பேருக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இதில் பங்குகொள்ள விரும்பும் ஆசிரியர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை 181 பிரதான வீதியில் அமைந்துள்ள ரெக் நிறுவன அலுவலகத்தில் பெற்று இந்த மாதம் 20ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்க முடியும்.

கணினித்துறை சம்பந்தமான அறிவினை கிராமங்கள் தோறும் வளர்க்கும் முகமாக கிளிவெட்டி, தம்பலகமம், ஆலங்கேணி, சேனையூர், சம்பூர், நிலாவெளி ஆகிய இடங்களில் ஏற்கனவே கணினிப் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதேவேளை சாம்பல்தீவு என்னும் இடத்தில் மேலும் ஒரு பயிற்சி நிலையம் வெகுவிரைவில் திறக்கப்படவுள்ளது.

# தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்; ஒக்ரோபர் முதலாம் திகதி வழங்கப் பணிப்பு

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் கடமையாற்றும் சகல தொண்டர் ஆசிரியர்களுக்குமான நிரந்தர நியமனங்களை ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் வழங்குமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வடக்கு கிழக்கு மாகாண கல்விச் செயலாளர் ஆளுனர் ஆகியோருக்கு அவசர பணிப்புரை விடுத்துள்ளதாக மாகாணக் கல்விச் செயலாளர் ஆர். தியாகலிங்கம் தெரிவித்துள்ளார்.

வடக்கு கிழக்கு மாகாணத்தில்கடமையாற்றும் அனைத்து தொண்டர் ஆசிரியர்களையும் கஷ்ட, அதிகஷ்ட வேறுபாடின்றி சகல தொண்டர் ஆசிரியர்களையும் நேர்முகப் பரீட்சைக்கு உடனடியாக உட்படுத்தி தகுதியுள்ள அனைவருக்கும் நியமனம் வழங்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே வலயக் கல்விப் பணிப்பாளர்களால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள பட்டியல்களுக்கு மேலதிகமாக வலயக் கல்வி அலுவலகங்கள் மாகாணக்கல்வி அமைச்சு என்பனவற்றுக்கு கிடைக்கப்பெற்றுள்ள மேன் முறையீட்டு தாரிகளையும் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்துமாறும் நியமன விடயத்தில் வலயக் கல்வி அலுவலங்கள் மாகாணக்கல்வி அமைச்சு என்பன வெளிப்படைத் தன்மையை பேண வேண்டுமெனவும் சனாதிபதி பணித்துள்ளார்.

சனாதிபதியின் பணிப்புக்கமைய கஷ்ட, அதிகஷ்ட பாடசாலை வேறுபாடு, க.பொ.த உயர் தரத்தில் சித்தி பெற்று பல்கலைக்கழக அனுமதிக்கான தகைமை வேண்டும் என்ற கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

2004 ஆம் ஆண்டு சனவரி முதலாம் திகதிக்கு மூன்று வருட சேவையைப் பூர்த்தி செய்த க.பொ.த உயர் தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்ற அனைத்துத் தொண்டர்களும், தகுதிக்கமைய நிரந்தரமாக்கப்படுவர் என்று செயலாளர் தியாகலிங்கம் தெரிவித்தார்.

தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்கல் தொடர்பான நேர்முகப் பரீட்சையை நடத்துவதற்கான உத்தரவுகள் மாகாணக்கல்வி அமைச்சினால் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# பருத்தித்துறை மத்திய மருந்தகத்திற்கு 60இலட்.ரூபா செலவில் புதிய கட்டடம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மத்திய மருந்தகத்திற்கு அறுபது இலட்சம் ரூபாய் செலவில் அடுக்குமாடிக்கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்கு சுகாதாரத்திணைக்களம் முன்வந்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான ரூபா 30 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் இதன் கட்டடப்பணிகள் தொடங்கப்பட்டு இருப்பதாகவும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

யுத்த அனர்த்தங்களால் முன்னர் பருத்தித்துறை துறைமுகப் பிரதேசத்தில் இருந்து அத்தியடி யிலுள்ள தனியார் கட்டடம் ஒன்றிற்கு இடமாற்றம் செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (28)

# பாதுகாப்பு வலயத்திற்குள் நிற்கும் நாய்களால் தொல்லை

## -பொதுமக்கள் முறைப்பாடு

(வலிகாமம்)

யாழ்.பொன்னாலை இராணுவ உயர்பாதுகாப்பு வலயப்பகுதியிலிருந்து வெளிவரும் கட்டாக்காலி நாய்கள் அயலிலுள்ள பொதுமக்கள் வாழ்க்கைக்கு நாசகரம் புரிந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாதுகாப்பு வலயப்பகுதியினுள் இருந்து வரும பெருமளவான நாய்கள் பொதுமக்கள் வளர்த்து வரும் ஆடு,மாடு,கோழி என்பவற்றைக் கடித்துக்குதறி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அண்மைக்காலத்தில் மட்டும் ஐந்து ஆடுகளைக் கடித்து குதறிக் கொன்றிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து இராணுவப் பொறுப்பதிகாரிகளிடம் பொதுமக்கள் முறைப்பாடுகள் தெரிவித்திருந்தும எது விதமான நடவடிக்கைகளும் மேற்கொளளப்படவில்லையென்றும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (37)

# சுயநிர்ணய உரிமையை நிறுவ அனைவரும் அணிதிரளும் காலம் நெருங்கி விட்டது

## -தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் அறைகூவல்

**பேச்சு வார்த்தை மூலம் எமது உரிமையைப் பெற்றுக் கொள்ள முடியுமென இனிமேலும் எம்மை நாமே ஏமாற்றிக்கொண்டிருக்காது சுயநிர்ணய உரிமையை நிறுவுவதற்காக நாம் அனைவரும் அணிதிரளும் காலம் நெருங்கி விட்டது.**

இவ்வாறு தென்மராட்சி பொது அமைப்புக்களின் ஒன்றியம் பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் அறைகூவல் விடுத்துள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; சிங்கள தேசம் தமிழ் மக்களின் உரிமைகள் எதனையும் வழங்கத்தயாராக இலலை என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்து வருகிறது. தந்தை செல்வநாயகம் போன்ற மிதவாதத்தலைவர்களுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் தொடக்கம் இன்றைய இடைக்கால தன்னாட்சி அதிகாரசபைப் பொதுக்கட்டமைப்பு வரையிலான நிராகரிப்புக்கள் சமாதான வழிகளில் பேச்சுவார்த்தை மூலம் எதையும் வழங்குவதற்குத் தாம் தயாராக இல்லை என்பதைச் சிங்கள தேசம் தெளிவாகவே சொல்லிவிட்டது. எரிந்துகொண்டிருக்கும் இனப்பிரச்சினையை விட சனாதிபதித் தேர்தலே சிங்களத் தலைவர்களுக்கு முக்கியமாகி விட்டது.

அகதிவாழ்வு வாழ்ந்து அல்லற்படும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக எம்மக்களைத் தொடர்ந்து அடிமைகளாக்குவதற்கான சாசனங்கள் வரைவதில் சிங்களக்கட்சிகள் கூட்டுச்சேர்கின்றன. இயல்புவாழ்க்கையைத் தோற்றுவித்து பேச்சுவார்த்தைகள் மூலம் படிப்படியாக நிரந்தரத் தீர்வை நோக்கி நகர்வதற்காகத் தோற்றுவிக்கப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசினாலும், இராணுவத்தாலும் சிதைக்கப்பட்டுவருகிறது.

மூன்றரை ஆண்டுகள் கடந்து விட்டபோதும் தமிழ் மக்களின் வாழ்வில் எந்தவித விடிவும் ஏற்படவில்லை. சமாதான காலத்தில் போராளிகளும் பொதுமக்களும் கொல்லப்படுகிறார்கள். தமிழ் மக்களின் போராட்டப் பலத்தை நசுக்குவதற்கான நடவடிக்கைகள் திட்டமிட்டு மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நிலையில் தொடர்ந்து சமாதானப் பேச்சுவார்த்தை எனக்கூறிக் கொண்டு எம்மை நாமே ஏமாற்றக் கூடாது. எமது இறைமையையும், சுயநிர்ணய உரிமையையும நிலைநிறுத்துவதற்காக நாம் அனைவரும் ஒன்று திரளவேண்டிய காலம் வந்து விட்டது.

எமது இலட்சியத்தை அடையும் காலம் கனிந்துவருகிறது. எமது மண்ணில் நிறுவப்பட்டுள்ள நடைமுறை அரசை அங்கீகரிக்கும் படி சர்வதேசத்தை வலியுறுத்துவதன் மூலமே எங்கள் இலட்சியத்தை அடைய முடியும். இதுவே உயர்ந்த இலட்சியத்திற் காக ஆகுதியாகிய மாவீரர்களினதும், மக்களினதும் தியாகங்களுக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

இந்த வரலாற்றுக்கடமையைச் செய்வதற்காக எதிர்வரும் 30ஆம் திகதி ஒன்று திரளுமாறு தென்மராட்சியிலுள்ள அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் பணியாளர்கள், வர்த்தகர்கள், கூட்டுறவாளர்கள், தொழிலாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## -ஆசிரிய நியமனம் வழங்கப்படாததால்

# நுண்கலைப்பட்டதாரிகள் ம. உ. ஆணைக்குழுவில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்ட நுண்கலைப்பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்காது புறக்கணிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தின் ஓர் பீடமாக இயங்குகின்ற நுண்கலைப் பீடத்தில் கற்கை நெறியை முடித்து பட்டம் பெற்றபட்டதாரி ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படவில்லை. கடந்த 1999ஆம் ஆண்டு பட்டம் பெற்று வெளியேறிய நுண்கலைப்பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டபோதிலும் 2000,2001, 2002 ஆம் ஆண்டு பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படாது வேதனைக்குரிய விடயமாகும்.

நுண்கலைபீடத்தில் பட்டம் பெற்ற நாட்டிய கலைமாணி, இசை கலைமாணி போன்ற பட்டதாரி ஆசிரியர் இதுவரை காலமும் அரச சேவைக்குள் உள்ளீக்கப்படவில்லை. வடக்கு கிழக்கு மாகாண பட்டதாரி ஆசிரியர்களுக்கு அண்மையில் நியமனம் வழங்கப்பட்டபோதிலும் நுண்கலைப்பட்டதாரிகள் நியமனம் செய்யப்படாதது மனித உரிமை மீறும் செயல் என தெரிவித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நுண்கலைப்பட்டதாரிகளின் முறைப்பாடு விரைவாக விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட இணைப்பாளர் பிரியதர்ஷன தெரிவித்துள்ளார். (கீ)

# எவர் தேர்தலில் வெற்றி பெற்றாலும் பிரச்சினைகள் தீரப்போவதில்லை

## -வன்முறைகளற்ற ஜே.வி.பி கட்சி தெரிவிப்பு-

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றி பெற்றாலும் சரி மகிந்த வெற்றி பெற்றாலும் சரி பிரச்சினைகள் தீரப்போவதில்லை. விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அவர்களுடன் கைகோர்த்து செயற்படாவிட்டால் இந்த நாட்டிற்கு எதிர்காலம் என்பதே கிடையாது. இவ்வாறு வன்முறைகளற்ற ஜே.வி.பி கட்சியின் தேசிய, அனைத்துலக அமைப்பாளர் பேராசிரியர் சுபாஷ் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி யின் நிறுவுனர்களில் ஒருவரும் றோகண விஜயவீரவின் மைத்துனருமான பேராசிரியர் சுபாஷ் சந்திரா என்பவரே ஜே.வி.பியிலிருந்து பிரிந்து"ஜே.வி.பி. வன்முறைகளற்ற கட்சி" என்ற கட்சியை ஆரம்பித்துள்ளவரா வார்.

மேற்படி கட்சி கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடொன்றை நடத்தி சனாதிபதித் தேர்தல் தொடர்பான தனது நிலைப்பாட்டை அறிவித்ததுடன், தற்போதைய ஜே.வி.பி கட்சியின் அரசியல் கடும் போக்கையும், ஜே.வி.பி தலைவர்களையும் கடுமையாக விமர்சித்தது.

அங்கு பேராசிரியர் சுபாஷ் சந்திரா அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; 1965 ஆம் ஆண்டு றோகண விஜயவீரவுடன் இணைந்து நான் ஜே.வி.பி கட்சியை உருவாக் கினேன். இன்று ஜே.வி.பி அரசியல் சாக்கடைக்குள் கிடக்கிறது. ஜே.வி.பி யின் இன்றைய தலைவர்களான டில்வின் சில்வா, விமல் வீரவன்ச போன்றோர் றோகண விஜயவீரவை ஒருபோதும் சந்தித்திராதவர்கள். விஜய குமாரணதுங்க, றோகண விஜயவீர எவ்வாறு கொல்லப்பட் டார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். உண்மைகளைக் கூறுவதானால் நானும் நாளை கொல்லப்படலாம். ஆயினும் உண்மைகளைக் கூற நான் அஞ்சவில்லை.

கட்சியின் நிதியைக் களவாடியவர்கள் க.பொ.த.சாதாரண தரம் கூட சித்தியடையாதவர்கள் இன்று பெரும் தலைவர்களாக உள்ளனர். பிற்படுத்தப்பட்ட சமூக மக்களுக்காக போராடுவதாகக் கூறும் ஜே.வி.பி யினர், ஒரு தொழிலுமே செய்யாமல் குளிரூட்டப்பட்ட ஊர்திகளில் செல்கிறார்கள். குளிரூட்டப்பட்ட வீடுகளில் ஆடம்பர வாழ்க்கை நடத்துகிறார்கள். ஜே.வி.பி. பூர்ஷ்வாக்களின் (சிறு முதலாளித்துவ வாதிகள்) பிரதிநிதிகளாக செயற்படுகின்றது. அவர்களுக்குத் தேவை யுத்தம். இதனால் அவர்கள் அடிப்படை வாதத்தையும் இனவாதத்தையும் தூண்டி வருகின்றனர்.

கொழும்பில் நடைபெறும் சகல வன்முறைகளுக்கும், கொலைகளுக்கும் பிரபாகரன் மீதே பழி கூறப்படுகின்றது. ஜே.வி.பியே இந்த சம்பவங்களின் பின்னணியில் செயற்படுகின்றது என்றார்.

# கலைப்பீட மாணவர்களுக்கான முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட முதலாம் வருட மற்றும் மூன்றாம் வருட மாணவர்களுக்குரிய சகல விரிவுரைகளும் இன்று ஆரம்பமாகின்றன.

அன்றைய தினம் அனைத்து கலைப்பீட மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் ஒன்று மு.ப10.00 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதால் அனைத்து கலைப்பீட மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ். புருசோத்தமன் கேட்டுள்ளார்.

# நீதிமன்றிலிருந்து குண்டுகள் சகிதம் தப்பி ஓட முயன்ற கைதி பிடிபட்டார்

மாரவில நீதிமன்ற சிறைக்கூடத்திலிருந்த சந்தேக நபர் ஒருவர் இரண்டு கைக்குண்டுகளுடன் சிறைச்சாலை அதிகாரியை தாக்கிவிட்டு தப்பியோட முற்பட்டபோது ஏனைய சிறைச்சாலை அதிகாரிகளினால் பிடிக்கப்பட்டுள்ளார்.

மாரவில நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்த போது இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதனையடுத்து நீதிமன்றத்தினுள் பெரும் பதற்றம் நிலவியது.

சந்தேக நபருக்கு எடுக்கக்கூடிய வகையில் பை ஒன்றினுள் இரு கைக்குண்டுகளைப் போட்டு சிறைக் கூண்டிற்கு அருகே பெண்ணொருவர் வைத்ததாகவும் தெரியவந்துள்ளது.

மற்றொரு சந்தேக நபரை வெளியே எடுக்க கூண்டைத்திறந்த போதே குறித்த சந்தேக நபர் வெளியே பாய்ந்து இந்தப்பையை எடுத்துள்ளார். அவரைப் பிடிக்கச்சென்ற சிறைச்சாலை அதிகாரியை சந்தேக நபர் குண்டு இருந்த பையினால் தாக்கியுள்ளார். அவ்வேளை அந்தப்பை அவரின் கையிலிருந்து நழுவி விழுந்துள்ளது.

சந்தேக நபர் ஓடித்தப்ப முயன்றபோதிலும் சிறைச்சாலை அதிகாரிகள் அவரைப்பிடித்து விட்டதாகப் பொலிசார் தெரிவித்தனர்.

குண்டுகள் இருந்தபை சந்தேகநபரின் கையிலிருந்து நழுவியதால் அவரினால் நீதிமன்றத்திற்குள் குண்டுகளை வீசமுடியாது போயுள்ளது.

நீதிமன்றத்திற்கு இக் குண்டுகளைகொண்டுவந்த பெண்மணி நீதிமன்றத்திற்கு அருகிலுள்ள வீடொன்றில் மறைந்திருந்த போது கைது செய்யப்பட்டார்.

தப்பியோட முயன்றவர் பல கொலை, கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்று கூறப்படுகின்றது.

# புத்தர் சிலைக்கான பாதுகாப்பு; குறைப்பிற்கு பிக்குகள் கண்டனம்!

திருகோணமலையில் நிர்மாணிக்கப்பட்ட புத்தர் சிலைக்கான இராணுவப் பாதுகாப்பு குறைக்கப்பட்டமைக்கு பிக்குகள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

திருமலை பேருந்து நிலையத்தில் திடீரென உருவாக்கப்பட்ட இந்தச் சிலையைப் பாதுகாக்க நான்கு காவலரண்கள் அமைக்கப்பட்டு இராணுவத்தினர் பாதுகாப்புப் பணிக்கு அமர்த்தப்பட்டனர். இதற்கான பாதுகாப்பே தற்போது குறைக்கப்பட்டுள்ளது.

இராணுவத்தின் இந்த நடவடிக்கைக்கு உள்ளூர் பிக்குகள் அமைப்பு கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

# எழுச்சி மாநாட்டிற்கான முன்னேற்பாடுகளில் மன்னார் வெகுசன அமைப்புக்கள் தீவிரம்

மன்னாரில் எதிர்வரும் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள தமிழ் தேசிய எழுச்சி மாநாட்டிற்குரிய சகல முன்னேற்பாடான வேலைத் திட்டங்களும் இடம் பெற்று வருகின்றன. இதனை முன்விட்டு வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம், தேசிய எழுச்சிப் பேரவை, வர்த்தக சங்கத்தினர், தனியார் போக்குவரத்துக் கழகம் முச்சக்கரவண்டி சாரதிகள் சங்கம் போன்றன இணைந்து கிராம, பிரதேச, மாவட்ட ரீதியாக எழுச்சி மாநாடு தொடர்பான ஆக்கபூர்வமான வேலைகளை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றன. (18)

# இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு

## பெருந்தெருக்கள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# கேள்வி கோரல்கள்

சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கியின் நிதி வழங்கலின் ஊடாக

## முல்லைத்தீவு பிராந்திய வீதி, கட்டட புனரமைப்பு வேலைத்திட்டம்

மாகாணப்பணிப்பாளர் வ – கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா அதன் கேள்வி கோரல் சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர் முல்லைத்தீவு வலயத்திற்குட்பட்ட பின்வரும் வேலைகளிற்கு மூடி ஒட்டப்பட்ட கேள்வி கோரல்களை பெற்றுக் கொள்ள உள்ளது.

| வீதியின் பெயர் | மாவட்டம் | தகுதி | பாதுகாப்புத் தொகை |
|---|---|---|---|
| பருத்தித்துறை – மருதங்கேணி வீதியின் 25.00 – 30.97 கி.மீ மற்றும் சோரன்பத்து – தாளையடி வீதியின் 6.50 – 7.48 கி.மீ பகுதியை தார் ஊற்றி கல் பரப்புதல் (SBST) | கிளிநொச்சி | M6 அல்லது அதற்கு மேல் (வீதி நிர்மாணம்) | ரூபா 70.000.00 |
| நிறைவேற்றுப் பொறியியலாளர் காரியாலய மீள் நிர்மாணம் | முல்லைத்தீவு | M6 அல்லது அதற்கு மேல் (கட்டட நிர்மாணம்) | ரூபா 70.000.00 |

கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறை 10.10.2005 அன்று பிற்பகல் 2.00 மணியுடன் முடிவடையும்

கேள்விப் பத்திரங்கள் தயாரிக்கப்படுவதற்குரிய படிவங்களை பின்வரும் காரியாலயங்களில் இருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும்

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் | மின் அஞ்சல் |
|---|---|---|
| மாகாணப்பணிப்பாளர் வ – கி (வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை கண்டி வீதி, வவுனியா. | 024 – 2222826 | rdanorth@sltnet.lk |

கேள்விப்பத்திர ஆவணங்கள் 21.09.2005 தொடக்கம் மீளளிக்கப்பட முடியாதவைப்புத் தொகையான 1,725.00 (பெறுமதி சேர்வரி உள்ளடங்கலாக) செலுத்துவதன் மூலம் விநியோகிக்கப்படும்.

முன் கேள்வி கோரல் கூட்டம் 29.09.2005இல் மாகாணப்பணிப்பாளர் – கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா காரியாலயத்தில் காலை 10.00 மணிக்கு நடைபெறும்

02 நிறைவேற்றும் காரியாலயம் வீதி அபிவிருத்தி அதிகாரசபையே ஆகும்.

03 தகுதி வாய்ந்த கேள்வி கோருபவர்கள் பின்வரும் தகைமை பிரமாணங்களுக்கு இணங்குதல் வேண்டும்.

அ.கேள்வி கோருபவர் தன்னை இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் பெந்தெருக்கள் மற்றும் கட்டட நிர்மாணத்தில் மேல் வேலைகளுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள தரங்கள் அல்லது அதற்கு மேல் தற்போது பதிவு செய்திருத்தல் வேண்டும்.

ஆ.கேள்வி கோருபவர் இலங்கை தேசிய நிர்மாணசங்கத்தில் (NCASL) செல்லுபடியாகும் ஒழுங்கான உறுப்புரிமையை கேள்வி கோரல் படிவம் பெற்றுக் கொள்ளும் பொழுதும் ஒப்பந்தத்தை வழங்கும் பொழுதும் கொண்டிருத்தல் வேண்டும்.

04 கேள்வி கோரல் ஆவணங்களை மாகாணப்பணிப்பாளர் வ – கி(வடக்கு) வீதி அபிவிருத்தி அதிகாரசபை வவுனியா அல்லது பிரதம பொறியியலாளர்,வீதி அபிவிருத்தி அதிகார சபை 155 ஆம் கட்டை, கிளிநொச்சி அலுவலகங்களில் எதுவித கட்டணங்களும் இன்றி பார்வையிட முடியும்

05 கேள்விப் பத்திரங்கள் கேள்வி கோரல் முடிவுத்திகதியில் இருந்து 120 கலண்டர் நாட்கள் வரை செல்லுபடியாக இருக்கும்.

01 கேள்விப் பத்திரங்கள் மேலே தரப்பட்ட வேலைகளிற்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாப்பு தொகைகளுக்கு உரிய பாதுகாப்பு பத்திரங்களையும் கொண்டிருக்க வேண்டும்.

ஏற்றுக்கொள்ளக் கூடிய பாதுகாப்பு பத்திரங்களை கொண்டிராத கேள்வி கோரல்கள் நிராகரிக்கப்படும்.

02 கேள்விப் பத்திரங்கள் குறிப்பிட்ட முடிவுறும் நேரத்தின் பின்பு உடனடியாக மாகாணப்பணிப்பாளர் வ --கி(வ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை அலுவலகத்தில் திறக்கப்படும்.

கேள்வி கோருபவர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் கேள்விப் பத்திரம் திறக்கும் நேரம் பிரசன்னமாக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

03 மேலதிக விபரங்களிற்கு தயவு செய்து பின்வரும் அலுவலகங்கள், தொலைபேசி இலக்கங்கள், மின் அஞ்சல் முகவரிகள் மூலம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.

| அலுவலகம் | தொலைபேசி இலக்கம் | மின் அஞ்சல் |
|---|---|---|
| மாகாணப்பணிப்பாளர் வ – கி (வ), வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கண்டி வீதி, வவுனியா. | 024 – 2222826 | rdanorth@sltnet.lk |
| பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, 155 ஆம் கட்டை, கிளிநொச்சி. | 021 – 2285724 | |

மாகாணப் பணிப்பாளர் (வ.கி – வடக்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கண்டி வீதி,
வவுனியா.

(சி.12827)



# கடந்த வாரத்தில்

## 08/09/2005 14/09/2005

### 08

☐ உக்ரனில் ஊழல் புகார் அதிகரிப்பு காரணமாக இந்த அரசில் அங்கம் வகிக்க விரும்பவில்லை எனக் கூறி உக் ரைன் துணைப் பிரதமர் நிகோலாய் டொமன்கோ பதவியை ராஜினாமா செய்தார்.

☐ ரஷ்யாவிடமிருந்து 38 போர் விமானங் களை வாங்குவதற்கான ஒப்பந்தமொன்றில் சீனா கையெழுத்திட்டது.

☐ சுமாத்திராவில் மெதானில் பயண த்தை ஆரம்பித்து சிறிது நேரத்தில் மண் டேலா விமான சேவையின் போயிங் 737 - 250 ரக விமானம் விபத்துக்குள்ளானதில் 102 பயணிகள் பலி.



### 09

☐ பசுபிக் கடற்பகுதியில் அமைந்துள்ள பப்புவா நியூகினியா நாட்டில் ஏற்பட்ட பலத்த பூகம்பத்தால் சிறியளவிலான ஆழிப்பேரலை கள் ஏற்பட்டது. 40 சென்ரிமீற்றரிலிருந்து 50 சென்ரிமீற்றர் வரை ஆழிப்பேரலை ஏற்பட்டது.

☐ பிலிப்பைன்ஸ் அதிபர் குளோரியா அரோயாவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தலைநகர் மணிலாவிலுள்ள விமான நிலையம் அருகே எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று இடம்பெற்றது.

### 10

☐ பாக்தாத் விமான நிலையத்தை பராம ரிக்கும் பிரிட்டன் நிறுவனத்திற்கு ஈராக் அரசு பராமரிப்புக் கட்டணத்தை செலுத்தாததால் கடந்த மூன்று மாதங்களில் இரண்டாவது முறை யாக விமான நிலையம் மூடப்பட்டது.

### 11



☐ இந்திய பிரதமர் மன்மோகன்சிங் பிரா ன்ஸ் தலைநகர் பரிஸி ற்கு பயணம்.

☐ 38 வருடங்களாக காஸா பகுதியில் நிலைகொண்டிருந்த இஸ்ரேலியப் படையினர் முற்றாக வெளியேற்றம்.



☐ ஜப்பானில் பொதுத்தேர்தல் நடை பெற்றது. இதில் பிரதமர் யுனிசுரோ கொய் சுமியின்லிபரல் சனநாயகக் கட்சி அமோக வெற்றியீட்டியது.

☐ அமெரிக்காவில் 110 மாடி உலக வர்த்தக மையம் தீவிரவாதிகளால் விமானம் மூலம் தகர்க்கப்பட்ட நான்காவது ஆண்டு நினைவுதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

### 12

☐ டுபாயில் இரசாயன கிடங்கில் ஏற்பட்ட வெடிவிபத்தில் இந்தியர்கள் உட்பட 80 பேர் படுகாயம்.

☐ ஜார்க்கண்ட் மாநிலத்தில் 15 பொதுமக்கள் நக்ஸலைட்டு தீவிரவாதிகளினால் சுட்டுக் கொலை.

### 13

☐ பாக்தாத்திலுள்ள உல்லாச விடுதியொன் றுக்கருகில் குண்டுவெடித்ததில் இருவர் பலியானதுடன் 17 பேர் காயம்.



☐ ஜம்முகாஷ்மீரின்பூஞ் மாவட்டத்தில் எல்லைக் கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதியில் இந்திய இராணுவத்தினரால் மூன்று பாகிஸ் தானிய தீவிரவாதிகள் சுட்டுக்கொலை.

☐ தென்கொரியாவில் அமெரிக்காவுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியபடி மக்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

### 14

☐ தமிழ் திரைப்பட நடிகர் விஜயகாந்த் தேசிய முற்போக்கு திராவிட கழகம் என்ற பெயரில் அரசியல் கட்சியை ஆரம்பித்தார்.

☐ ஈராக்கிய தலைநகர் பாக்தாத்தில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் குறைந்தது 150 பேர் பலியாகினர். 200 பேருக்கு அதிகமானவர்கள் காயமடைந்த னர்.



☐ 60 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் ஐ.நா.சபையின் கூட்டத்தொடர் அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் ஆரம்பம்.



இந்திய பிரதமர் மன்மோகன்சிங் அமெரிகக சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ்ஷை நியூ யோர்க்கில் சந்தித்துப் பேசினார்

# சு.க.-ஜே.வி.பி ஆதரவாளர்கள் 1800பேர் ஐக்கிய தேசியக் கட்சியில் இணைவு

## – மேலும் பெருமளவானோர் இணையக் காத்திருப்பு –

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சி மற்றும் ஜே.வி.பி யின் 1800 ஆதரவாளர்கள் ஐக்கியதேசியக் கட்சியில் இணைந் துள்ளனர்

இரத்தினபுரிமாவட்ட கலவான தொகுதியில் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் சனாதிபதித் தேர் தல் பிரச்சாரத்தில் இவர்கள் அக்கட் சியில் இணைந்துள்ளனர்.

ஜே.வி.பி யும் ஜாதிஹெல உறு மய கட்சியும் இணைந்து இந் நாட்டில் இனவாதத்தை தூண்டிவிட்டு மேலும் ஒரு யுத்தத்திற்கு நாட்டை வழி நடத் திச் செல்ல முற்படுகின்றன என அவர்கள் அங்கு தெரிவித்துள்ளனர்.

இக்கட்சிகளிடத்தில் தெளிவான பொருளாதார திட்டங்கள் எதுவும் கிடையாது. தற்பொழுது மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய திட்டங் களை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே செயற் படுத்த முடியும். எனவே மேலும் அங் கத்தவர்கள் ஐக்கிய தேசியக் கட்சி யில் இணைவதற்கு தயாராகவுள்ள னர் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு தனித்துப் போட்டியிட முடிவு!

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு தனித் துப் போட்டியிட முடிவு செய்துள்ள தாக அதன் தலைவர் ஹாபிஸ் நசர் அஹமத் தெரிவித்திருக்கிறார். கடந்த புதன்கிழமை இரவு அவசரமாக கூடிய முஸ்லிம் தேசியக் கூட்டமைப் பின் அதிஉயர்பீடத்தின் கூட்டத் திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்ட தாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் சமூகத்தின் அரசியல் அபிலாசைகள் மற்றும் தேவைகள் தொடர்பாக முஸ்லிம் தேசியக் கூட்ட மைப்பு இரு பிரதான கட்சிகளின் வேட்பாளர்களிடம் முன்வைத்த கோரிக்கைகள் குறித்து இவ்விரு கட்சிகளும் எழுத்து மூல உத்தரவா தத்தை தராதமையினால் தமது கட்சி இம்முடிவை எடுத்துள்ளதாகவும் ஹாபிஸ் நசீர் அஹமத் தெரிவித்துள் ளார்.

முஸ்லிம் சமூகத்தின் அபிலாசை கள் மற்றும் தேவைகளை முன்னி லைப்படுத்தி சனாதிபதித் தேர்தலில் தமது கட்சி தனித்துப் போட்டி யிடுவது தொடர்பான விளக்கமளிக் கும் ஊடகவியலாளர் மாநாடு விரை வில் நடத்தப்படவிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

# சனாதிபதித் தேர்தல் நடவடிக்கையில் 65, 000 சிறிலங்கா பொலிசார்

(கொழும்பு)

நடைபெறவிருக்கும் சனாதிபதித் தேர்தல் நடவடிக்கைக்காக அறுப த்தையாயிரத்திற்கும் அதிகமான பொலிசாரை சேவையில் ஈடுபடுத்த வுள்ளதாக பொலிஸ் தேர்தல் பிரிவிற் குப்பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்; சுதந்திரமானதும், நியா யமானதுமான தேர்தல் ஒன்றை நடத் துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளினதும் ஒத்துழைப்பு அவசி யம் எனவும், வாக்களிப்பு நிலையங் களுக்கு பாதுகாப்பு வழங்குதல் மற் றும் வாக்குப்பெட்டிகள் கொண்டு செல்லும்போதும் வாக்குகள் எண்ணப் படும்போதும் மற்றும் தேவைகளுக் காகவுமே அறுபத்தையாயிரத்திற்கும் அதிகமான பொலிசார் தேவைப் படுவதாகவும் அவர் கூறினார்.

# ஐ.நா. அமைதிபடை பணிக்கு சிறிலங்கா வான், கடற்படையினர்!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் அமைதிப்படை யில் இணைந்துகொள்ள சிறிலங் காவிலிருந்து முதன்முறையாக கடற்படையினரும், வான் படையின ரும் ஹெய்ட்டி செல்லவுள்ளனர்.

கடற்படையிலிருந்து தெரிவுசெய் யப்பட்ட 50 பேரும், வான் படையி லிருந்து தெரிவுசெய்யப்பட்ட 48 பேருமே இந்த முதல் பயணத்தில் இணைந்து கொள்கின்றனர். இராணு வத்தைச் சேர்ந்த 102 படையினரும் இக்குழுவுடன் ஐக்கிய நாடுகள் அமைதிப்படையுடன் இணைந்து கொள்ள ஹெய்ட்டி செல்லவுள்ளனர்.

மேஜர் ஜெனரல் நிரஞ்சன் ரண சிங்க தலைமையில் செல்லும் இக்குழு கடந்த வியாழக்கிழமை காலை கொழும்பு முகத்துவாரத்திலுள்ள ரொக் ஹவுஸ் இராணுவ முகாமில் தமது பயணத்திற்கு முன்னரான கூட்டு அணிவகுப்பு மரியாதையொன்றை நடத்தியது. இம்மாத முடிவிற்குள் இவர்களின் ஹெய்ட்டி பயணம் மேற் கொள்ளப்படும் எனவும் இதற்கு முன் னர் இராணுவத்தினர் இரண்டு தடவை கள் ஐக்கிய நாடுகள் அமைதிப்படை யில் இணைந்து அமைதிப் பணிக ளில் ஈடுபட்டுள்ளதாகவும் அந்த படையதிகாரி தெரிவித்தார்.

# கண்டாவளைப் பிரதேச கிராமங்களில் உணவு, போசாக்கு கருத்தரங்கு

கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள கிராமங்களில் பன் முகப்படுத்தப்பட்ட வரவு, செலவுத் திட்டத்தின் கீழ் உணவு, போசாக்குக் கருத்தரங்குகள் கிராமங்களிலுள்ள பொது நோக்கு மண்டபங்களில் நடை பெற்று வருகின்றது.

ஊரி பான், சம்புக்குளம், குமரபுரம் ஆகியமூன்று கிராமங்களில் கிராம உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு டன் கண்டாவளைப் பிரதேச செயலக அபிவிருத்தி இணைப்பாளர் சூ.மோன் ரனி, அபிவிருத்தி உதவியாளர் இ.ஜெகதீஸ்வரன் மற்றும் விவசாயத் திணைக்கள புளியம் பொக்கணை கமநல சேவை நிலைய விவசாயப் போதனாசிரியர் செல்விமாலினி, சிரேஷ்ட மருத்துவ மாது திருமதி.வதனி மற் றும் கண்டாவளைப் பிரதேச அணி யினரும் சுகாதார வைத்திய அதிகாரி த.பாஸ்கரன், பொதுச்சுகாதாரப்பரிசோ தகர் ஸ்ரீ.தவராசா சேகரன் ஆகியோர் கலந்து கருத்துரைகளை வழங்கி வருகின்றார்கள். கிராம மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய பொதுவான உணவுப் பழக்கங்கள், குழந்தை களுக்குத் தாய்ப்பாலின் அவசியம், சுகாதாரமாகவும், சுத்தமாகவும் வாழ் வது எப்படி? குடும்பக் கட்டுப்பாடு, வீட்டுத்தோட்டத்தின் அவசியம், நஞ் சற்ற மரக்கறிவகைகள் இதனைப் பெறுவது தொடர்பானது பற்றிய பல விடயங்களை கருத்தமர்வில் மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

கருத்தமர்வில் கலந்துகொண்ட கண்டாவளை மக்களுக்குபிரதேச செயலர் சீ.சத்தியசீலனினால் சான்றி தழ்கள் வழங்கப்பட்டது. இக்கருத் தரங்கு நிகழ்வு காலை தொடக்கம் மாலை வரை நடைபெற்றது. இதில் பெருமளவு மக்கள் கலந்து பயன் பெற்று வருகின்றனர். (46)

## – வவுனியா தெற்கு வலய –

# முன்பள்ளி கல்வி கற்றல் உபகரணக் கண்காட்சி

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தெற்கு வலய முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையம் ஏற் பாடு செய்துள்ள முன்பள்ளி கல்வி கற்றல் உபகரண கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வவுனியா தெற்குவலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கணே சபாதம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதமவிருந்தினர்களாக வவுனியா சிங்களப் பிரிவுப் பிரதேச செயலாளர் டி.எம்.ஆர்.பி. தசநாயக்க, வவுனியா தமிழ்ப்பிரிவுப் பிரதேச செயலாளர் செல்வி.தவசஸ்வரி ஆகியோரும் சிறப்பு விருந்தினர்களாக தமிழர் புனர்வாழ்வுக்கழக வவனியா மாவட்ட பணிப்பாளர் எஸ்.திருஞானசம்பந்தமூர்த்தி, வவுனியா தெற்கு கல்வி வலய பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான ஜனாப், எம்.ஏ.எம் கமால், யு.என் சந்திரசேனா, வவுனியா கோட்டக்கல்வி அதிகாரி வீ.கணேசராஜா, சிங்களப்பிரிவு கோட்டக் கல்வி அதிகாரி வி.கே. ஜெயரட்ண ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.(10)

# நிவாரணம், புனர்வாழ்வு மற்றும் நல்லிணக்க அமைச்சு

# வடக்கு கிழக்கு மாகாணசபை

## சுனாமியால் பாதிக்கப்பட்டபகுதிகளை மீளக் கட்டியெழுப்பும் திட்டம் (TAARP)

### ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

### "ஆஅவ" நன்கொடை இல:- 0006 SRI(SF)

# கேள்வி கோரல் இல-01

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01 சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மீளக் கட்டியெழுப்பும் திட்டம் *(TAARP)* ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ('ஆ.அ.வ') நன்கொடையொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதி வாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இந்நன்கொடையின் ஒருபகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னகத்து தொழில்தருனராகக் குறிப்பிடப்படும் (NECORD) கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக முல்லைத்தீவு மாவட்டக் கேள்விச்சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | MU/TAARP/ID/01 | *முல்லைத்தீவில் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகமும், விடுதியும் (கட்டடங்கள் திணைக்களம்) நிர்மாணித்தல்.* | *M5* | **1,39, 000/=** |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (NCCASL )உறுப்பினராக (ICTAD டுடன் மேற்படி M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்த தன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது 01.07.2003 இற்குப் பின் பதிவுசெய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தகாரர் திருப்திகரமான ஒத்ததன்மையிலான வேலைகளை ஒப்பந்தகாரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தகாரர்களாகவோ செய்திருத்தல் வேண்டும். முழு வேலைகளும் வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.

IV "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்கவேண்டும்.

V மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.

VI ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

VII கேள்வி கோருவோர் பெறுமதி சேர் வரி (VAT) பதிவுச் சான்றிதழின் நிழற்பிரதியை அல்லது நிறுவனம் பதிவு செய்யப்படாத சந்தர்ப்பத்தில் பெறுமதி சேர் வரியில் இருந்து விலக்களிக்கப்பட்டதாக உள்நாட்டு இறைவரி ஆணையாளரிடமிருந்து உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தை "B" கடித உறையுடன் சமர்ப்பிக்கப்படும் ஏனைய ஆவணங்களுடன் சேர்த்து சமர்ப்பித்தல் வேண்டும்.

04 மேற்குறிப்பிட்ட அட்டவணையில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டஒப்பந்தங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் கேள்விகோர முடியும். ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது. 01.07.2003 இற்குப் பின் பதிவு செய்யப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள ஒப்பந்தகாரர்கள் ஒத்ததன்மையிலான வேலைகளை ஒப்பந்தகாரர்களாகவோ அல்லது உப ஒப்பந்தகாரர்களாகவோ முடித்திருந்தால் எந்தவொரு நேரத்திலும் ஏதாவது ஒப்பந்தகாரர்களுக்கு NECORD திட்டத்தில் அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை ஒன்று ஆகும்.

05 தகுதிவாய்ந்த கேள்வி கோருவோர் மேலும் தகவலை மாவட்ட பிரதிக்கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, முல்லைத்தீவில் பெற்றுக்கொள்ளலாம்.

06 ஒப்பந்த ஆவணங்களை 2005, செப்ரெம்பர் 21 ஆம் திகதியிலிருந்து 2005 செப்ரெம்பர் 28 ஆம் திகதி வரை முற்பகல் 9.30 இலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/= ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07 முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று, இதன் முல்லைத்தீவு NECORD அலுவலகத்தில் 2005 செப்ரெம்பர் 30 ஆம் திகதி முற்பகல் 10.00க்கு நடைபெறும்.

08 கேள்வி முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறி வைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும். அத்துடன் அது 9 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட திகதியில், இடத்தில் விநியோகிக்கப்படல் வேண்டும்.

09 அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்த பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், மாவட்டக் கேள்விச்சபை, NECORD, மாவட்ட கருத்திட்ட அலுவலகம்,கச்சேரி, முல்லைத்தீவிற்கு 2005 ஒக்டோபர் 05 ஆம் திகதி முற்பகல் 11.00 மணிக்கு முன்பதாகக் கிடைக்க அனுப்பப்பட வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

10 கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருனர் பொறுப்பாகமாட்டார்.

திருமதி. இமெல்டா சுகுமார்,
தலைவர்,
மாவட்ட கேள்விச்சபை/அரசாங்க அதிபர்,
முல்லைத்தீவு மாவட்டம்.

*(சி.12831)*

# வெற்றிடங்கள்

## நிவாரணம், புனரமைப்பு நல்லிணக்க அமைச்சு
## வடக்கு கிழக்கு மாகாணசபை
## சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை மீளமைக்கும் திட்டம் (TAARP) உட்பிரிவு "B"
## வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தி திட்டம் (NECCDEP)
## ஆசிய அபிவிருத்தி வங்கியின் நன்கொடை 0006-SRI (SF)

நிவாரணம், புனரமைப்பு நல்லிணக்க அமைச்சினதும் வடக்கு கிழக்கு மாகாண சபையினதும் கீழ் செயற்படும் நெக்டெப் (NECCDEP) திட்ட அலுவலகத்திலும் மாவட்ட திட்ட அலுவலகங்களிலும் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்காக பின்வரும் தகைமையும் அனுபவமும் உடையவர்களிடம் இருந்து கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### பொதுவான நிபந்தனைகள்

01. பதவிகள் ஒப்பந்த அடிப்படையிலானதும் தற்காலிகமானவையும் ஆகும். நியமனங்கள் முதலில் ஒரு வருடத்திற்கு ஒப்பந்த அடிப்படையிலும் பின்பு செயற்திறன் அடிப்படையிலும் தேவையின் அவசியத்தின் அடிப்படையிலும் வருடாந்தம் நான்கு வருடங்களுக்கு நீடிக்கக் கூடியதுமாகும்.

### 02. வயதெல்லை

விண்ணப்பதாரிகள் 60 வயதிற்கு குறைந்தவர்களாக இருத்தல்வேண்டும் 55 வயதிற்கு குறைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

03. விண்ணப்பதாரிகள் (1) இலங்கை பிரஜையாக இருத்தல்வேண்டும் (2) நல்ல ஆரோக்கியம் உள்ளவராகவும் திட்ட பிரதேசத்தில் எவ்விடத்திலும் சேவையாற்றும் உடற் தகுதி உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

### 04. விண்ணப்பிக்கும் முறை

விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித்தகைமை, தொழில்சார் தகைமைகள் பிறந்த திகதி முன்னைய தொழில் தகைமைகள்/ அனுபவங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி விண்ணப்பத்தினை அவர்களாகவே தயாரிக்கவேண்டும் விண்ணப்பம் பதிவுத் தபால் மூலம் 2005.10.03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் திட்டப்பணிப்பாளர் வடக்கு கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தி திட்டம் (NECCDEP) 56 மத்திய வீதி உவர்மலை, திருகோணமலை என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படவேண்டும். ஏற்கனவே அரச சேவையில் உள்ளவர்கள் தங்கள் திணைக்கள தலைவர் ஊடாக தங்கள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கவேண்டும் விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் இடப்பட வேண்டும்.

### 05. தெரிவு செய்யப்படும் முறை

தகைமை அடிப்படையில் தயாரிக்கப்படும் குறும் பட்டியல் அடிப்படையில் நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவுசெய்யப்படும்.

### 06. சம்பளம்

அரசசேவையில் உள்ள சமாந்தரமான பதவிகளுக்கு ஏற்புடையதானதுமானதும் 2000.12.26 ஆம் திகதிய 10ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக சம்பளத்துடன் கூடிய 50வீதம் படியும் வழங்கப்படும்.

### 01. மாவட்ட பிரதித்திட்டப்பணிப்பாளர் பதவி (04 பதவி வெற்றிடங்கள்)

மாவட்டதிட்ட அலுவலகம் யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு, கிளிநொச்சி, மட்டக்களப்பு ஆகியவற்றில் ஒவ்வொரு பதவி வெற்றிடம்.

#### கடமைகளும் பொறுப்புகளும்

01. மாவட்ட திட்ட அலுவலகத்தை வினைத்திறனுடன் முகாமைத்துவப்படுத்தல் அதன் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து மேற்பார்வை செய்து அவற்றின் செயற்பாடுகளை நிறைவேற்று மதிப்பீடு செய்தல்
02. திட்ட நடவடிக்கைகளின் அமுல்படுத்தலை கண்காணித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் திட்டமிடலை ஒழுங்கமைத்தலும் முறைமைகள் வழிகாட்டல்களை திறமையாக ஒழுங்குபடுத்தலும்
03. நடைமுறைப்படுத்தலின்போது ஏற்படும் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கான தீர்வு நடவடிக்கைகளை உடன் எடுத்தல்
04. திட்டநடைமுறைப்படுத்தலுடன் சம்பந்தப்பட்டவெளிநாட்டு நிதிமுகவர்களுடன் மற்றும் பங்குதாரர்களுடனும் நெருங்கிய நட்புறவினை ஏற்படுத்திப் பேணிவரல்
05. திட்டப் பணிப்பாளரின் வேண்டுதலுக்கமைய வழங்கல் ஆவணங்கள் மற்றும் அறிக்கைகளை தயாரித்தல்.

#### தேவையான கல்வித்தகைமை

01. பொறியியல், விஞ்ஞானம்,சட்டம், பொருளியல், விவசாயம், வர்த்த முகாமைத்துவம்/முகாமைத்துவம்/கணக்கியல் ஆகிய ஏதாவது ஒரு துறையில் இளமானிப்பட்டப்படிப்பு அல்லது இது தொடர்பான துறையில் 8வருட அனுபவத்தில் 5வருடம் சிரேஷ்ட முகாமைத்துவ அபிவிருத்தி திட்டத்தில் அனுபவம் இருத்தல் விரும்பத்தக்கது.
02. அரசசேவையில் நாடளாவிய சேவையில் வகுப்பு II/I தரத்தில் உள்ளவர்களும் நியமனத்திற்கு பரிசீலிக்கப்படுவர். வகுப்பு II/I தரத்தில் விண்ணப்பதாரிகள் இல்லாத பட்சத்தில் வகுப்பு II/II தரத்தில் உள்ளவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும்
03. ஆங்கில மற்றும் கணனியில் அதிசிறந்த அறிவு.

### திட்டமுகாமைத்துவ நிபுணர் (3 வெற்றிடங்கள்)

மாவட்ட திட்ட அலுவலகம் யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகியவற்றில் ஒவ்வொரு பதவி வெற்றிடம்

#### கடமைகளும் பொறுப்புகளும்

திட்ட முகாமைத்துவ நிபுணர் பதவியை வகிப்பவர் மாவட்ட திட்ட பணிப்பாளருக்கு கீழ்க்காணும் விதத்தில் உதவவேண்டும்.

01. மாவட்ட முகவர் நிறுவனங்களின் ஆற்றல் தகைமையை மதிப்பிடலும் திட்டத்தின் தேவைக்கேற்பஅந்நிறுவனங்களில் ஆற்றல் விருத்திக்கு பயிற்சி அளித்தலுக்காக பயிற்சித்திட்டங்களை வகுத்தல்
02. குறித்தஅரச முகவர்களின் அதிமுக்கிய திட்ட நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து அமுலாக்கல் வழி முறைகளை விருத்தி செய்தல்.
03. அமுல்படுத்தப்படும் திட்ட வேலைகளின் தரத்தை கணிப்பீடு செய்தல்
04. அமுலாக்கல் பங்குதாரர் அ.சா.நி (NGO)களின் மற்றும் வாழ்வாதார தொழில்துறை அபிவிருத்தி சேவைவழங்குநிறுவனத்தினர் (LEDS) மற்றும் ஒப்பந்தக்காரர்களில் தகைமை/பிரமாணங்களை அமுல்படுத்த மாவட்ட திட்டப்பணிப்பாளருக்கு உதவுதல்.

#### தேவையான கல்வித்தகைமைகள்

01. திட்டமிடலும் அபிவிருத்தியும் அல்லது அது தொடர்பான துறையில் இளமானிப்பட்டம் மற்றும் திட்டமிடல், கண்காணித்தல்,மதிப்பிடல் ஆகிய துறைகளில் குறைந்தது 10 வருட அனுபவம்.
02. அரச சேவையில் நாடளாவிய சேவையில் வகுப்பு II/I தரத்தில் உள்ளவர்களும் நியமனத்திற்கு பரிசீலிக்கப்படுவர். வகுப்பு II/I தரத்தில் விண்ணப்பதாரிகள் இல்லாத பட்சத்தில் வகுப்பு II/II தரத்தில் உள்ளவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும்.
03. ஆங்கிலத்திலும் கணனியிலும் அதிசிறந்த தேர்ச்சி.

### 03. உதவிப்பணிப்பாளர் திட்டமிடல் பதவி (02வெற்றிடங்கள்)

இரு வெற்றிடமும் திருகோணமலை திட்ட அலுவலகத்தில்

#### கடமைகளும் பொறுப்புகளும்

இப்பதவியை வகிப்பவர் சமுதாய அபிவிருத்தி உட்கட்டமைப்பு திட்டங்களை திட்டமிடல், கண்காணித்தல், அமுல்படுத்தல் ஆகியவற்றிற்கு திட்டப்பணிப்பாளருக்கு உதவுவது, திட்ட ஆலோசனைகளை தயாரிப்பது, முன்னேற்ற அறிக்கைகளை தயாரிப்பது,திட்டத்தின் வெற்றிகரமான அமுலாக்கலுக்கு தொடர்புடைய தரவுகளை சேகரித்தல் மற்றும் உப திட்டங்களை அமுல்படுத்தலில் திட்டப் பணிப்பாளருக்கு உதவுவது.

#### தேவையான கல்வி மற்றும் தகைமைகள்

01. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற முதல் தர அல்லது இரண்டாம் தர இளமானிப்பட்டம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டப்பின் படிப்பு சான்றிதழ் அல்லது பட்டபின்படிப்பு டிப்ளோமா சான்றிதழ்.
02. திட்டமிடல் மற்றும் கண்காணிப்பில் இரண்டு வருட அனுபவமும் ஆங்கிலத்திலும் கணனியிலும் அதிசிறந்த தேர்ச்சியும்
03. அரச சேவையின் நாடளாவிய சேவையில் வகுப்பு II/I தரத்தில் உள்ளவர்களும் நியமனத்திற்கு பரிசீலிக்கப்படுவர். வகுப்பு II/I தரத்தில் விண்ணப்பதாரிகள் இல்லாத பட்சத்தில் வகுப்பு II/II தரத்தில் உள்ளவர்களின் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும்.

### 04. கணக்காளர் பதவி (வெற்றிடம் 04)

திட்ட அலுவலகம் திருகோணமலை,மாவட்ட அலுவலகம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகியவற்றில் ஒவ்வொரு பதவி வெற்றிடம்

#### கடமைகளும் பொறுப்புகளும்

இப்பதவியை வகிப்பவர் நிதி முகாமைத்துவத்தை ஸ்தாபிப்பதும் பராமரிப்பதும் உள்ளக நிதிக் கட்டுப்பாடு, திட்டமிடுதல், வரவு செலவுத்திட்டத்தை தயாரித்தல், கணக்குகளை சரியாக அறிக்கை செய்தலும், கணக்காய்வு முறைமை செய்தலும் இவைகளைச் சரிவரச் செய்வதற்கேதுவாக தேவையான புத்தகங்களைத் தயாரிப்பதும் பராமரிப்பதும்.

### தேவையான கல்வித்தகைமைகள்

01. இலங்கை அல்லது ஐக்கிய இராச்சிய பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் நடுநிலை பரீட்சை அல்லது உரிமப் பரீட்சை அல்லது
02. ஐக்கிய இராச்சிய பட்டய முகாமைத்துவ கணக்காளர் நிறுவனத்தின் பகுதி1, பகுதி 2இல் சித்தி அல்லது
03. ஐக்கியஇராச்சியத்தினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பட்டயக் கணக்காளர் நிறுவனத்தின் பகுதி 1, பகுதி2 இல் சித்தி அல்லது
04. இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமாவில் சித்தி அல்லது
05. இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய வர்த்தக டிப்ளோமாவில் சித்தி அல்லது
06. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் கணக்கியல் அல்லது பொருளியல் பாடத்தில் பட்டதாரி அல்லது
07. ஐக்கிய இராச்சிய செயலாளர்களினதும் நிர்வாகிகளினதும் பட்டய நிறுவனத்தின் இறுதிப் பரீட்சையில் சித்தி.

## 05. திட்டமிடலாளர் பதவி (8 பதவி வெற்றிடம்)

மாவட்ட திட்ட அலுவலகம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகியவற்றில் இரண்டு இரண்டு பதவிகளும் கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அட்டாளைச் சேனை அலுவலகங்களில் ஒவ்வொரு பதவி வெற்றிடம்.

### கடமைகளும் பொறுப்புகளும்

இப்பதவியை வகிப்பவர் திட்ட நடவடிக்கைகளை திட்டமிடல், அமுல்படுத்தல், கண்காணித்தல், ஆய்வுசெய்வதில் மாவட்ட திட்டப்பணிப்பாளருக்கு உதவுவது திட்டமுன்னேற்ற அறிக்கைகளை தயாரிப்பது, திட்டத்தின் வெற்றிகரமான அமுலாக்கலுக்கு தொடர்புடைய தரவுகளை சேகரித்தல் மற்றும் திட்டங்களை தயாரிப்பதில் திட்டப் பணிப்பாளர், மாவட்ட திட்டப் பணிப்பாளருக்கு உதவுவது.

### தேவையான கல்வித்தகைமைகள்

01. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற முதல் தர அல்லது இரண்டாம்தர இளமானிப்பட்டம் அல்லது இளமானிப்பட்டத்துடன் டிப்ளோமா சான்றிதழ் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக த்தில் பட்டத்துடன்தொடர்புடைய பாடங்களில் பின் பட்டப் படிப்பு சான்றிதழ்
02. திட்டமிடல் மற்றும் கண்காணிப்பில் இரண்டு வருட அனுபவமும் ஆங்கிலத்திலும் கணனியிலும் அதிசிறந்த தேர்ச்சியும்
03. அரச சேவையில் நாடளாவிய சேவையில் வகுப்பு II/I தரத்தில் உள்ளவர்களும் நியமனத்திற்கு பரிசீலிக்கப்படுவர். வகுப்பு II/I தரத்தில் விண்ணப்பதாரிகள் இல்லாத பட்சத்தில் வகுப்பு II/II தரத்தில் உள்ளவர்.

## 06. திட்டகண்காணிப்பு அலுவலர் பதவி (08 வெற்றிடம்)

மாவட்ட திட்ட அலுவலகம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகியவற்றில் இரண்டு இரண்டு பதவிகளும் கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அட்டாளைச் சேனை அலுவலகங்களில் ஒவ்வொரு பதவியும் உள்ளது.

### கடமைகளும் பொறுப்புகளும்

இப்பதவியை வகிப்பவர் மாவட்ட திட்டப் பணிப்பாளர்களுக்கு கீழ்க்காணும் நடவடிக்கைகளில் உதவுதல் வேண்டும்.

01. சகல திட்டநடவடிக்கைகளையும் திட்டமிடலும் கண்காணித்தலும் ஆய்வு செய்தலும்
02. திட்ட முறைமைகளை வளர்த்தெடுத்தலும் வருடாந்த வேலைத்திட்டம் தயாரித்தலும் திட்ட எண்ணக்கருஅறிக்கை தயாரித்தலும்
03. முகாமைத்துவத்தின் தேவைக்கேற்ப காலாந்தர அறிக்கை தயாரித்தல், முன்னேற்ற அறிக்கையும் கண்காணிப்புக்கு தேவையான சுட்டிகளையும் தயாரித்தல்
04. காலாந்தர முன்னேற்ற அறிக்கைகளும் செயற்பாட்டு அறிக்கைகளும் தயாரித்தல்.

### தேவையான கல்வித்தகைமைகள்

01. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் பெற்ற இளமானிப்பட்டத்துடன் திட்டமிடல் அல்லது அரசசார்பற்ற நிறுவனத்தில் ஒருவருடம் கடமையாற்றிய அனுபவம்
02. ஆங்கிலத்திலும் கணனியிலும் கடமையாற்றக்கூடிய தேர்ச்சி.

## 07. கணக்குப் பதியுநர் பதவி (07 வெற்றிடம்)

திட்ட அலுவலகம் திருகோணமலை,மாவட்ட அலுவலகம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருகோணமலை, மட்டக்களப்பு, அட்டாளைச் சேனை ஆகியவற்றில் ஒவ்வொரு பதவி வெற்றிடம்

### கடமைகளும் பொறுப்புகளும்

திட்டஅலுவலகத்திலும் மாவட்ட திட்ட அலுவலகங்களிலும் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ள கணக்குப் பதியுநர் கணக்குகளை பராமரித்தல்,செலவுபொழிப் பற்றிக்கை,செலவின அறிக்கை, வங்கிக்கணக்கிணக்கக் கூற்று ஆகியவற்றை தயாரித்தல் உட்பட வெளிநாட்டு உதவுதொகை தொடர்பான அமுலாக்கல் முகவர்களுக்கு வெளிவிளிபரிப்புக்கான அறிக்கைகளை தயாரிக்க கணக்காளருக்கு உதவுதல்.

### தேவையான கல்வித்தகைமைகள்

01. க.பொ.த (சா/தர) பரீட்சையில் தமிழ்/சிங்களம், கணிதம், வர்த்தகம்/கணக்கியல் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறுபாடங்களில் சித்தி
02. க.பொ.த. (உ/தர) பரீட்சையில் வர்த்தகம்/கணக்கியல் உட்பட புதிய பாடத்திட்டத்தின் கீழ் 2பாடங்களில் சித்தி அல்லது பழைய [illegible] த்தின் கீழ் 3 பாடங்களில் சித்தி அத்துடன்
03. இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்லூரியின் [illegible] டிப்ளோமாவில் சித்தி அல்லது
04. இலங்கை உயர் தொழில் நுட்பக் கல்லூரியின் உயர் தேசிய வர்த்தக டிப்ளோமாவில் சித்தி.

### தொழில்சார் தகைமைகள்

01. கணக்குப்பதியுநராக 5வருட அனுபவம் அத்துடன் அரச மற்றும் வெளிநாட்டு நிதியுடன் இயங்கும் திட்டகணக்கு நடவடிக்கைகளில் அனுபவம்
02. MS,WORD,EXCEL கணனி செயற்பாட்டில் அனுபவத்துடன் கணனியில் தனித்து கடமை ஆற்றும் திறன்
03. ஆங்கிலத்தில் கடிதத் தொடர்பு கொள்ளும் திறன்.

## 08. முகாமைத்துவ சேவைஉதவியாளர் பதவி (15 வெற்றிடம்)

திட்ட அலுவலகம் திருகோணமலையில் நான்கு பதவிகள் மாவட்ட அலுவலகம் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகியவற்றில் மூன்று மூன்று பதவிகள், கிளிநொச்சியில் இரண்டு பதவிகளும் திருகோணமலை, மட்டக்களப்பு, அட்டாளைச் சேனை அலுவலகங்களில் ஒவ்வொரு பதவி வெற்றிடம்

### கடமைகளும் பொறுப்புகளும்

முகாமைத்துவ உதவியாளர் பதவி வகிப்பவர் திட்டப் பணிப்பாளர், மாவட்ட திட்டப் பணிப்பாளர்களினாலும் முதன்மை உத்தியோகத்தர்களினாலும் வழங்கப்படும்திட்டக் கடமைகளான கணனி கடமைகள், திட்ட கண்காணிப்பு கடமைகள், ஆய்வு வேலைகள், நிர்வாக கடமைகள், கணக்கியல் கடமைகள், களஞ்சிய கணக்கீடு தொடர்பான கடமைகளை ஆற்ற வேண்டும்.

### தேவையான கல்வித்தகைமைகள்

01. க.பொ.த (சா/தர) பரீட்சையில் தமிழ்/சிங்களம், கணிதத்துடன் ஏதாவது இரண்டு பாடங்களில் (மொத்தம் நான்கு பாடங்களில்) திறமைச்சித்தியுடன் ஆறுபாடங்களில் சித்தி
02. க.பொ.த. (உ/தர) பரீட்சையில் புதிய பாடத்திட்டத்தின் கீழ் 2 பாடங்களில் சித்தி அல்லது பழைய பாடத்திட்டத்தின் கீழ் 3 பாடங்களில் சித்தி அத்துடன்
03. ஆங்கிலத்தில் ஆற்றலும் கணனித்துறையில் பணிசெய்யும் ஆற்றலும்

## 09. சாரதி பதவி (03 பதவி வெற்றிடம்)

மாவட்ட அலுவலகம் யாழ்ப்பாணம்,முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகியவற்றில் ஒவ்வொரு பதவி வெற்றிடம்

### கல்வித்தகைமைகள்

01. க.பொ.த.(சா/தர) பரீட்சையில் சித்தி
02. வாகனம் ஓட்டுதற்கான தகுதியான உரிமம் (License)
03. வாகனம் ஓட்டுவதில் 4 வருட அனுபவம்.

**எஸ். ரங்கராஜா**
**பிரதம செயலாளர்**
**வகிமா**

(சி-12832)


## கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் - கிளிநொச்சி

# கிளைப் பொதுக்கூட்டம் - 1.10.2005 - 2.10.2005

கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப்பொதுச்சபைக்கூட்டம் கீழ்க் குறிப்பிடப் படும் விபரத்திற்கு அமைவாக நடைபெறும். இதனை வாக்களிக்க தகைமையுடைய ஒவ்வொரு உறுப்பினரும் தமக்கு வழங்கப்பட்ட சொந்த அறி வித்தலாக கருதி தவறாது சமூகமளித்து தெரிவுக்கான ஒத்துழைப்பை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

| 01.10.2005 - மு.ப. 9.00 மணி |
|---|
| கணேசபுரம்- கண்ணகை அம்மன் ஆலயம் |
| திருநகர்-சுரபிமுன்பள்ளி (கி.அ.சங்கம்) |
| ஜெயந்திநகர்-இந்து ஆரம்ப பாடசாலை |
| கனகபுரம்- கனகபுரம் மகாவித்தியாலயம் |
| அம்பாள்குளம்-அம்பாள்குளம் கிளைக்கட்டடம் |
| செல்வாநகர் - செல்வாநகர் அ.த.க.பாடசாலை |
| புதுமுறிப்பு - புது/விக்னேஸ் [illegible] வித்தியாலயம் |
| உருத்திரபுரம் மேற்கு - உ[illegible]மகாவித்தியாலயம் |
| உருத்திபுரம் கிழக்கு - புனி[illegible]பற்றிமா றோ.க.த.பாடசாலை |
| சிவநகர்- சிவநகர் அ.த.க.பாடசாலை |

| 02.10.2005 - மு.ப. 9.00 மணி |
|---|
| கிளி/மேற்கு - புனித திரேசா மகளிர் கல்லூரி |
| கிளி/கிழக்கு -சங்க தலைமை அலுவலகம் |
| இரணைமடு கிழக்கு - சங்கதலைமை அலுவலகம் |
| இரத்தினபுரம்- இரத்தினபுரம் கிளைக்கட்டடம் |
| ஆனந்தபுரம் -கிளி/மத்திய கல்லூரி |
| உதயநகர்- உதயநகர் கிழக்கு கி.அ.சங்கம் |
| கனகாம்பிகைக்குளம் - கனகாம்பிகை அ.த.க.பாடசாலை |
| பாரதிபுரம் - பாரதிவித்தியாலயம் |
| திருவையாறு - திருவையாறு அ.த.க. பாடசாலை. |

(சி-12859)

திரு.த.பத்மானந்தன்,
தேர்தல் உத்தியோகத்தர். க.தெ.ப.நோ.கூ.சங்கம்.

# முரண்பாட்டு அரசியலும் மகிந்தவும்

சிறிலங்காவின் முக்கிய நகரங்களிலுள்ள மதிற் சுவர்களில் ரணில் விக்கிரமசிங்கவினதும் மகிந்த ராஜபக்ஷவினதும் உருவப் படங்களுடன் கூடிய தேர்தல் பிரச்சார சுவரொட்டிகள் நிறைந்து காணப்பட்டபோதும் சனாதிபதி சந்திரிகா தொடர்ந்து ராஜபக்ஷவை விமர்சிப்பதும் அவர்பற்றி பேட்டியளிப்பதும் கடந்த வாரங்களில் சாதாரணமாக நிகழும் சம்பவங்களாகியுள்ளன.

ரணில் விக்கிரமசிங்க தமது தேர்தல் பணிகளில் நம்பிக்கையுடன் ஈடுபட்டுவரும் அதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் பெரும் போட்டிகளும் இழுபறி நிலையும் தொடர்ந்தவண்ணமேயிருக்கின்றன. அதுவும் ராஜபக்ஷவின் பிரிவினருக்கும் சந்திரிகாவின் பிரிவினருக்குமிடையில் மேற்படி சம்பவங்கள் சற்று அதிகரித்துக் காணப்படுகின்றன. ராஜபக்ஷவைப் பொறுத்தவரை தான் ஜே.வி.பி யுடனும் ஜாதிக ஹெல உறுமயவுடனும் செய்துகொண்ட இரு உடன்படிக்கை மூலம் சற்று ஆறுதல் பெற்றுள்ளார். ஆனால் சுதந்திரக் கட்சியின் கொள்கைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்படாமல் அந்த ஒப்பந்தங்களை எவ்வாறு செய்ய முடியும் என்பது சந்திரிகா தரப்பின் வாதமாகும்.

அத்துடன் பிரதமரை சந்திக்க அலரிமாளிகைக்கு செல்வோரே நிபந்தனைகளை ஏற்று உடன்படிக்கையில் கைச்சாத்திட வேண்டுமேயன்றி இவர் நிபந்தனைகளை ஏற்று கைச்சாத்திட வேண்டியதில்லை. இது ஒரு வேடிக்கையாகும். ஆனால் இங்கு 12 விடயங்கள் குறிப்பிடப்பட்டு கைச்சாத்திடப்பட்டுள்ளன. இந்த இரு கட்சிகளுடனும் செய்துகொள்ளப்பட்ட இவ்வொப்பந்தங்கள் பிரதமரின் நிலைப்பாடு தொடர்பாகவும் கட்சிக் கொள்கை தொடர்பாகவும் கேள்விகளை யெழுப்பியுள்ளன. சந்திரிகா குறிப்பிடுவது போன்று உடன்படிக்கையில் கூறப்படும் இரு விடயங்கள் குறிப்பாக பொதுக்கட்டமைப்பைக் கைவிடுதல் மற்றும் நாட்டின் ஐக்கியத்தைப் பேணுதல் என்னும் விடயங்களே நாட்டின் சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைக்கு முட்டுக்கட்டையாகவுள்ளன என தெரிவிக்கப்படுவதுடன் ராஜபக்ஷவின் அணுகுமுறையும் போலித்தனமாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இந்த உடன்படிக்கையாவும் சனாதிபதித் தேர்தலில் அவர் வெற்றி பெறுவதற்கு ஜே.வி.பி யினதும் ஜாதிக ஹெல உறுமயவினதும் ஆதரவைப் பெறுவதற்கு மட்டுமேதான். வெற்றி பெற்று சனாதிபதியானால் நான் இவற்றை ஒரு பொருட்டாக எடுக்கமாட்டேன் என்றும் சூசகமாக அறிவிப்பதுபோல் தோன்றுகிறது. அவ்வாறாயின் ஊடகங்களுக்கு இது தொடர்பில் பகிரங்கமாக அறிவிப்பது ஒன்றாகவும் பூட்டிய அறைக்குள் இருந்து எடுக்கும் முடிவுகள் வேறொன்றுமாகவே தோன்றுகிறது. இதற்கு உதாரணமாக அண்மையில் அவரது சகாக்களான அமைச்சர் மங்கள சமரவீர சிறிபதி சூரியாராச்சி என்பவர்களுடன் அலரிமாளிகையில் நடந்த சந்திப்பைக் குறிப்பிடலாம்.



பிரதமரினதும் அவரது சகாக்களினதும் மன நிலை இவ்வாறு காணப்படுமானால் அது பெரும் கேள்விக் குள்ளாகலாம். அத்துடன் பிரதமர் ராஜபக்ஷ ஜே.வி.பி யினதும் ஜாதிக ஹெல உறுமயவினதும் அதிகாரங்களுக்குள் சிக்கி இருப்பதாக சில நோக்கர்கள் நம்புகின்றனர். காரணம் இவ்விரு கட்சிகளும் சில விடயங்களில் தனது அதிகாரத்தை ராஜபக்ஷவின் மூலம் செயற்படுத்த முயன்று வருவதாகும். இவர்கள் திறந்த மனதுடன் மகிந்தவுக்கு ஆதரவளிக்காவிட்டாலும் ஐ.தே.கட்சிக்கு எதிரானவர்களின் வாக்குகள் பிரதமரை வந்து சேரலாம். அண்மைக் காலமாக இவ்வொப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின்பு ஜே.வி.பி ஜாதிக ஹெல உறுமயவுக்கான ஆதரவு மக்களிடம் குறைந்து காணப்படுவதுபோல் தெரிகின்றது.

இந்த ஒப்பந்தம் கைச்சாத்திட்ட இருநாட்களின் பின்னர் சந்திரிகா நியூயோர்க்கில் உரையாற்றும் போது சிறிலங்கா அரசு ஐக்கிய இலங்கைக்குள் சர்வகட்சி அரசு ஒன்றை அமைப்பதும், விடுதலைப் புலிகளை சனநாயகத்துக்குள் கொண்டுவருவதும் என இரண்டு சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டியிருப்பதாக தெரிவித்துள்ளார். இவரின் இவ்யோசனைக்கும் பிரதமர் ராஜபக்ஷ செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கும் நிறைய வித்தியாசங்கள் காணப்படுகின்றன.

பிரதமர் அவர்களுக்கு அளித்துள்ள வாக்குறுதிகளின்படி சமாதான நடவடிக்கைகள் மேலும் சிக்கலுக்குள்ளாகும். அரசு ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு என்ற நிலையில் விடாப்பிடியாக இருக்குமாயின் ஒஸ்லோவின் சமஷ்டி தீர்வுக்கு புலிகள் இணங்கியதும் செல்லாக்காசாகிவிடும். சமாதான முன்னெடுப்புகளில் இரு பிரதான கட்சிகளும் ஒரே கொள்கையையே கடைப்பிடிக்கின்றன. இதனாலும் சமாதானம் ஆபத்தான கட்டத்துக்கு வந்து கொண்டிருக்கின்றது. அண்மையில் ரணில் தனது யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துமாறு கூட்டம் ஒன்றின்போது தெரிவித்துள்ளார். எனினும் இந்த விடயத்தில் ராஜபக்ஷ முற்று முழுதாக விலகியிருப்பதாகவே தெரிகிறது.

ஆயினும் அரசின் பேச்சாளரான நிமல் சிறிபால டி சில்வா இன்னும் சில வாரங்களில் சமஷ்டி முறையிலான தீர்வுக்கான நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் எனத் தெரிவித்துள்ளார்.

எனினும் ராஜபக்ஷவின் கொள்கையிலிருந்து விலகியிருக்கும் சந்திரிகா இதனை தான் இதிலிருந்து தப்புவதற்கான ஒருவழி என தெரிவித்துள்ளார். அவர் அரசியலில் செல்வாக்கை பாதுகாத்துக் கொள்வதற்கும் அவருடைய வாரிசுகளுக்கு அரசியலில் வழியேற்படுத்திக் கொடுக்கவும் இந்த சனாதிபதித் தேர்தலில் ரணில் வெற்றிபெற வேண்டும் என நினைக்கிறார். காரணம் மகிந்த அல்லது அவரது கூட்டுக் கட்சிகள் சிலவேளை அதிகாரத்துக்கு வந்தால் தனது வாரிசுகளுக்கு அரசியலில் சந்தர்ப்பம் கிடைப்பதும் தனது கட்சியை பாதுகாப்பதும் முடியாத காரியமாகிவிடும் எனக் கருதுவதாகும். அத்துடன் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் அழிந்துவிடும் எனக் கருதுவதாகும். அதே போன்று ராஜபக்ஷ தோல்வியுறும் பட்சத்தில் அவர் அரசியலிலிருந்து ஓதுக்கப்படுவதுடன் கட்சியின் தலைமைப் பதவிக்கும் போட்டியிட முடியாது.



நன்றி: லங்காதீப

சந்திரிகா அவருடைய நோக்கத்தை தக்கவைத்துக்கொள்ள வேண்டுமாயின் அவர் பல திடீர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அதன்படி முதலாவது அவர் நாடு திரும்பியதும் பாராளுமன்றைக் கலைத்து அதன்மூலம் ராஜபக்ஷவின் பரிவாரங்களை குழப்பத்துக்குள்ளாக்குதல் நீண்டநாட்களாகவே ஒரு விளையாட்டாக கருதும் இந்த முடிவை அவர் எடுப்பாரானால் மகிந்தவின் பிரதான கூட்டணிகளான ஜே.வி.பி, ஜாதிக ஹெல உறுமய இரண்டுமே பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டி வரலாம். அவ்வாறு அவர் நாடு திரும்பியதும் பாராளுமன்றைக் கலைத்துவிடில் [illegible]ாதிபதித் தேர்தலும் பொது[illegible]தேர்தலும் ஒருங்கே நடைபெறலாம். பொதுத் தேர்தலுக்கான தனது கட்சியின் பிரச்சாரப் பணிகளை சந்திரிகா முன்னெடுப்பார். மகிந்த சனாதிபதித் தேர்தலுக்கான பிரச்சாரப் பணிகளை முன்னெடுப்பார். எனினும் இவ்விருவரும் ஒருவருக்கொருவர் முரண்பாடான கருத்துக்களையே கூற வேண்டியிருக்கும். எவ்வாறாயினும் தற்போதைய நிலைப்பாட்டில் ராஜபக்ஷவை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக இன்னும் சந்திரிகா அனுமதிக்கக் கூடுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. கடந்த சிலவாரங்களாக ஜே.வி.பி யினருடன் ஒப்பந்தம் செய்துள்ளமை தொடர்பாக நீண்ட விளக்கத்தைத் தருமாறு சந்திரிகா மகிந்த ராஜபக்ஷவுக்கு அழுத்தம் கொடுத்து வருகின்றார். அதே பாணியில் நியூயோர்க்கில் நடைபெறும் ஆசிய சம்மேளனக் கூட்டத்திலும் பேசியுள்ளார். எனினும் இவற்றை எல்லாம் மகிந்த ராஜபக்ஷ கணக்கில் எடுக்காமல் இருக்கிறார். அதற்கான பதிலையும் அனுப்பத் தயாரில்லை என்ற நிலையில் காணப்படுகின்றார். இந்த நிலையில் கட்சியின் தலைவி என்ற வகையில் சந்திரிகா நடவடிக்கை எடுத்து அவர் கட்சியின் கொள்கைகளை புறந்தள்ளினார் என்ற ரீதியில் வேட்பாளர் நியமனத்தை ரத்து செய்தும் விடலாம். அவ்வாறு நடைபெறுமானால் மகிந்த ராஜபக்ஷ பொதுவான இடதுசாரிக் கட்சியின் வேட்பாளர் என்ற நிலைக்குள் தள்ளப்பட்டு விடுவார். அத்துடன் அரசியலில் பல பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கவேண்டி ஏற்படலாம்.

ஆனால் சந்திரிகா நாடு திரும்பியதும் மகிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து பொது எதிரியான ரணில் விக்கிரமசிங்கவை வெல்லும் நடவடிக்கையில் ஈடுபடும் சாத்தியமே அதிகமாக காணப்படுகின்றது. ஆயினும் சந்திரிகா திரும்பும்வரை இவை யாவும் மற்றவர்களின் வெறும் உத்தேசமாகவே கருதப்படுகிறது. உண்மையில் அவர் வெளிநாடுகளில் இருக்கும்போது தனது சட்டவாளர்களிடமும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் ஆகியோருடனும் கலந்துரையாடி தான் நாடு திரும்பியதும் சில கடுமையான நடவடிக்கைகளை எடுக்கப் போவதாக தெரிவித் துள்ளார். அதேபோல் ஆறுமுகம் தொண்டமானும் வெளிநாடு செல்லமுன் சனாதிபதித் தேர்தல் தொடர்பில் சந்திரிகாவுடன் கலந்து பேசுவதாகவும் அதுவரை கட்சிக்குள் எவ்விதமான முடிவையும் எடுக்கக்கூடாது என்றும் தெரிவித்துள்ளார். அதன்படி ராஜபக்ஷ ஜே.வி.வி யிடம் கூட்டு சேர்ந்திருப்பதால் அவருக்கு தேர்தலில் ஆதரவளிப்பது தொடர்பில் ப[illegible] கஸ்டங்களை எதிர் நோக்கியிருப்பதாக சந்திரிகாவிடம் தெரிவித்திருப்பதாக தெரிகிறது.

ஆயினும் ரணில் விக்கிரமசிங்கவைப் பொறுத்தவரை சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் தீவிரமாகியிருப்பதால் அது தனக்கு பெரும் நன்மையளிக்கும் என்ற நோக்கில் இருக்கிறார். ஐ.தே.கட்சி தனது பிரச்சாரப் பணிகளை நேற்று (ஞாயிறு) கொழும்பு நகர மண்டபத்தில் ஆரம்பிக்கவிருந்தது. அது தனது பிரச்சாரத்தில் வாழ்க்கை செலவு அதிகரிப்பு, விவசாயிகள் நெல்லுக்கு சாதகமான விலையை பெறமுடியாதுள்ளமை மற்றும் பல பிரச்சினைகளை முன்வைத்து தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடவுள்ளது.

எனவே சிறிலங்கா அரசியலில் ஏற்படவிருக்கும் திடீர் மாற்றங்கள் அடுத்த வாரங்களில் தெளிவாகி விடலாம்.

**கேசரஅபேவர்தன**
**(டெய்லிமிரர்)**
**தமிழில் வடிவேல்**





# நுட்பங்களை கற்று தேர்ச்சி பெறுவதன் மூலமே விளையாட்டில் சிறப்பிடத்தை பெற முடியும்

## தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா

விளையாட்டின் நுட்பங்களைக் கற்று தேர்ச்சி பெறுவதன் மூலமே விளையாட்டில் சிறப்பிடத்தை அடைய முடியுமென தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி. பாப்பா தெரிவித்துள்ளார்.

பச்சிலப்பள்ளி பிரதேசத்தின் பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற பச்சிலப்பள்ளி உதைபந்தாட்ட வீர வீராங்கனைகளுக்கான உதைபந்தாட்ட இரு நாள் பயிற்சி நெறியின் ஆரம்ப வைபவத்தில் உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், விளையாட்டு அணிகள் வெற்றியை மட்டுமே இலக்காக கொண்டு செயற்படாமல் சமூக நேசிப்பையும், தேசிய பற்றையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இதன் மூலமே ஒரு ஆக்கபூர்வமான எழிச்சிமிகு இளைய தலைமுறையின் உருவாக்கத்தை எமது தேசத்தில் எதிர்பார்க்க முடியும் எனவும் தெரிவித்தார்.

பச்சிலப்பள்ளி பிரதேச செயலாளர் சிவசிறி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா தேசியக் கொடியை ஏற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார். இந் நிகழ்வின் சிறப்பு விருந்தினர்களாக இளையோர் செயற்பாட்டு நிறுவன செயலாளர் அன்ரன் அன்பழகன், கிளி.மாவட்ட விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் சிவமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் பளைப் பிரதேச விளையாட்டுக் கழக வீரர்களுடன் பளை மத்திய கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர். பளைப் பிரதேச மகளிர் உதைப்பந்தாட்ட அணியின் உருவாக்கமும் இடம் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பயிற்சி நெறியை கிளி. மாவட்ட உதைபந்துப் பயிற்றுனர் சாண்டஸ் வழங்கினார். உத்தியோகத்தர்கள் புவனேந்திரராஜா, ஜெயக்குமார் ஆகியோா உதவிப் பயிற்றுனராக கடமையாற்றினார்கள். கிளி. மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் கனகராசா இப்பயிற்சியை நெறிப்படுத்தினார்.

இப் பயிற்சி நெறி கடந்த வாரம் பூநகரிப் பிரதேசத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான பயிற்சிநெறி அடுத்த வாரம் கண்டாவளைப் பிரதேசத்தில் நடைபெற வுள்ளதாக கிளி. மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் தெரிவித்தார்.

## ஆனைவிழுந்தான் பைந்தமிழ் வி.கழகம் நடாத்தும் மென்பந்து கிரிக்கெட் போட்டி

கிளிநொச்சி ஆனைவிழுந்தான் பிரதேச மாவீரர்கள் நினைவாக ஆனைவிழுந்தான் பைந்தமிழ் விளையாட்டுக்கழகம் நடாத்தும் 15 ஓவர்கள் கொண்ட மென்பந்து போட்டித் தொடர் ஒன்று மேற்படி கழக மைதானத்தில் எதிர்வரும் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளதாக கழக நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் அணிகள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்கு முன்னர் மேற்படி கழகத்திலோ அன்றி கிளி. மாவட்ட விளையாட்டுத்துறையிலோ அன்றி எ. அசோக்குமாரி (கிளிநொச்சி தொழில் நுட்பக்கல்லூரி) டமோ தொடர்பு கொள்ளுமாறு கழக நிர்வாகத்தினர் கேட் டுள்ளனர். எதிர்வரும் 27 ஆம் திகதி போட்டிகள் ஆரம்பமாவதால் முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர்கள் கேட்டுள்ளனர்.




## கிளி. ம.வி. 13 வயது அணி 120 ஓட்டங்களால் வெற்றி

கிளிநொச்சி மகாவித்தி[illegible] 13 வயது கடினப்பந்து கிரிக்கெட் அ[illegible]கும் யாழ். பெரியபுலம் அணிக்கும் இடையில் நடைபெற்ற கடினப் பந்துப்போட்டியில் கிளி. ம.வி. அணி 120 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

முதலில் ஆடிய கிளி. ம.வி. அணி நிர்ணயிக்கப்பட்ட 30 ஓவரில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றது.

160 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் ஆடிய யாழ். பெரியபுலம் அணி வெறும் 39 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.



## கங்குலி-சப்பல் விவகாரம் சூடுபிடிக்கிறது



இந்திய கிரிக்கெட் அணித் தலைவர் கங்குலி மற்றும் பயிற்சியாளர் சப்பலுக்கிடையிலான பிரச்சினை தற்போது விஸ்வரூபம் எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கங்குலியையா? கிரேக் சப்பலையா இந்திய அணியில் தொடர்ந்தும் வைத்திருப்பது என்ற கேள்வி எழும் அளவுக்கு இந்தப் பிரச்சினை பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது.



அந்த வகையில் 'கிரிக்கெட் இன்போ' இணையத்தளம் செய்தி ஒன்றை வெளியிட்டுள்ளது.

சிம்பாப்வேயில் கங்குலி, சப்பல் இடையில் என்ன நடந்தது என்பது தொடர்பாகவே அந்தச் செய்தியை அது வெளியிடப்பட்டுள்ளது.

போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது கங்குலி, சப்பலுக்கிடையில் வாக்குவாதம் நடைபெற்றதாகவும் அப்போது கங்குலி போட்டியில் கலந்துகொள்வதை விட்டுவிட்டு இந்தியா செல்லப்போவதாகக் கூறியதாகவும், பின்னர் அமித் பண்டாரி சப்பலுடன் இணைந்து கேட்டுக் கொண்டதுடன் இது ஒரு அணித் தலைவருக்கு நல்லதல்ல இது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என்று கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இருவருக்கும் இடையில் பிரச்சினை ஏற்பட்டுள்ளமை எதிர்காலத்தில் அணியைக் கொண்டு செல்வது எப்படி? எனவே இருவரில் ஒருவரை வைத்துக்கொண்டே வேலைகளைச் செய்ய வேண்டும் என்ற நிலை இந்திய கிரிக்கெட் சபைக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அந்தச் செய்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கங்குலியை விலக்குமாறு சப்பல் கூறியது இந்திய கிரிக்கெட் சபையின் பலத்துடனா என்பது தெரியாத நிலையில் இந்திய கிரிக்கெட் சபை கங்குலியையா? சப்பலையா அணியில் வைத்திருக்கப்போகின்றது என்ற கேள்வி பலமாக எழுந்துள்ளது.



## லில்லியின் கருத்திற்கு பொண்டிங் பதிலடி

அணித் தலைவர் பதவியை ஷேன் வோர்னிடம் கொடுத்து விட்டு துடுப்பாட்டத்தில் பொண்டிங் கவனம் செலுத்த வேண்டும் என்ற டென்னிஸ் லில்லியின் கருத்துக்கு பொண்டிங் பதிலடி கொடுத்துள்ளார்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைக் கொண்டிருப்பர். அணியை சுற்றி என்ன நடக்கிறது என்பதை அறிந்து லில்லி கருத்துக் கூறவேண்டும். அவ்வாறு அறியாமல் இக்கருத்தை கூறியுள்ளார்.

கடந்த ஆண்டு அணி பின்னடைவு பெற்றபோது அணியில் உள்ள எவருக்கும் லில்லி எந்த உதவியும் செய்தது கிடையாது. வெளியில் இருந்து கொண்டு அணி குறித்து எளிதாகக் கூறிவிடலாம். செய்து பார்த்தால்தான் தெ[illegible]யும். நான் மேற்கொள்ளும் முடிவுகள் சரியென அணியினரும், அவுஸ்திரேலிய கிரிக்கெட்டும் தன் மீதும் அக்கறை கொண்டுள்ளனர். எனது பணியை நான் சரியாகச் செய்வதாகவே நினைக்கின்றேன்.எனவே, லில்லி இது தொடர்பாக கவலையடையத் தேவையில்லை என்றும் பொண்டிங் தெரிவித்துள்ளார். ஒரு தொடரை வைத்து ஒரு தலைவரைச் சரியில்லை என்றும், ஒரு தொடரை வைத்து ஓகோ என்று புகழ்வதும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றே எனவும் அவர் தெரிவித்தார்.

## மேஜர் துளசி ஞாபகார்த்த மென்பந்துப் போட்டி அரையிறுதிப் போட்டிக்கு அணிகள் தெரிவு

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையின் ஆதரவில் நியூஸ்ரார் விளையாட்டுக்கழகம் நடாத்தும் மேஜர் துளசி ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் போட்டி நேற்று அரையிறுதி ஆட்டத்தை எட்டியது.



கிளி. முல்லை மாவட்டங்களைச் சேர்ந்த 22 அணிகள் கலந்துகொண்ட இப்போட்டிகள் உதயநகர் கிழக்கு நியூஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

நேற்று காலை முதல் மாலை வரை நடைபெற்ற போட்டிகளில் முதலாவதாக நடைபெற்ற போட்டியில் பாரதி அணியை எதிர்த்தாடிய சோலை ஏ அணி ஐந்து விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.



முதலில் ஆடிய பாரதி அணி 14.5 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் மூர்த்தி 17, முரளி எட்டு ஓட்டங்களை அதிகபட்சமாக பெற்றனர். பந்து வீச்சில் ஜெகதீஸ் மூன்று விக்கெட்டுக்களையும், சதீஸ், அன்ரனி தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய சோலை ஏ அணி 11.1 ஓவரில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து 83 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜெகதீஸ்வரன் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களையும், கீரன் பத்து ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் விக்கி, கௌரி தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இரண்டாவது போட்டியில் விசுவமடு தோழர்கள், கிளிநொச்சி இளம்தென்றல் அணிகள் மோதின.

இதில் தோழர்கள்அணி 103 ஓட்டங்களால் அபார வெற்றிபெற்றதுடன், அரையிறுதிப் போட்டிக்கும் தெரிவானது. முதலில் ஆடிய தோழர்கள் அணி நிர்ணயிக்கப்பட்ட ஓவரில் ஏழு விக்கெட்டுக்களை இழந்து 139 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சீலன் 33 ஓட்டங்களையும், சுகந்தன் 31 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பிறேம் மூன்று விக்கெட்டுக்களையும், குனேந்திரன், வசந்தன் தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

வெற்றியிலக்கு நோக்கி ஆடிய இளம் தென்றல் அணி ஒன்பது ஓவர் நிறைவில் சகல விக் கெட்டுக்களையும் இழந்து 36 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் வசந்தகுமார் 13 ஓட்டங்களையும், சூட்டி எட்டு ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் தர்மேந்திரா நான்கு விக்கெட்டுகளையும் ரங்கன், உதயா தலா இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

மூன்றாவது போட்டி கனகபுரம் - இளம் தாரகை அணிகளுக்கிடையில் நடைபெற்றது. இதில் இளந்தாரகை அணி ஆறு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றதுடன் அரையிறுதிப் போட்டிக்கும் தெரிவாகியது.

முதலில் ஆடிய கனகபுரம் அணி 13.3 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் றெஜி 18 ஓட்டங்களையும், கிருஸ்ணா 13 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர். பந்து வீச்சில் யோகீசன், மயூரன் தலா மூன்று விக்கெட்டுக்களையும், பிரபு இரண்டு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

91 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இளம் தாரகை 13 ஓவர் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. துடுப்பாட்டத்தில் துவாரகன் 16 ஓட்டங்களையும், யோகீசன் 15 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்று வெற்றிக்கு வழிசமைத்தனர். பந்து வீச்சில் அலன் இரண்டு விக்கெட்டுக்களையும், சுரேஸ், ரமணன் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

நான்காவதாக நடைபெற்ற போட்டியில் சென்யூட் சோலை பி அணிகள் மோதின. இதில் சென்யூட் அணி வெற்றி பெற்று அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

முதலில் ஆடிய சென்யூட் அணி 13 ஓவர் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சுரேஸ் அதிரடியாக ஆடி 31 ஓட்டங்களையும், அனந்தன் பத்து ஓட்டங்களையும், ஜெயராஜ் 18 ஓட்டங்களையும் முறையே பெற்றனர். பந்து வீச்சில் பகீரதன், நொகான் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

மேற்படி போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களாக குகன், கிஸ்ணரூபன் கடமையாற்றிதுடன் போட்டி வர்ணணையாளர்களாக சுதன், றெஜி அலோசியஸ் ஆகியோர் கடமையாற்றினர்.

## நியூஸ்ரார் வி.கழகம் நடாத்தும் கப்டன் இன்பராஜ் நினைவு பூப்பந்து போட்டி

கப்டன் இன்பராஜ் ஞாபகார்த்தமாக நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடாத்தும் பூப்பந்து (பற்மின்ரன்) போட்டி நடைபெற்றுவருகிறது.

மேற்படி போட்டிகள் ஒற்றையர், [illegible]டையர் பிரிவுகளாக [illegible] இரவு 7.00 மணிக்கு இளை[illegible] நிறு[illegible] வன மைதானத்தில் ஆ[illegible]

இதில் இரட்டையர் ஆட்டத்தில் தாசன், ரமணன் ஜோடி முதல் சுற்றில் வெற்றி பெற்றுள்ளனர். ஒற்றையர் ஆட்டத்தில் சதீஸ்குமார், கயல்செல்வன், ரமணன் ஆகியோர் முதல் சுற்றில் வெற்றி பெற்றுள்ளனர்.

## சிந்தனைக்கு



இந்த யுத்தத்தில் எமது போராளிகளும், பொதுமக்களும் செய்துள்ள அற்புதமான தியாகங்கள், உலக வரலாற்றில் ஓர் ஒப்பற்ற வீரகாவியமாகப் பொறிக்கப்பட்டு விட்டது.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 19.09.2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## வாழ்வுரிமைக்கான போராட்டம்!

"இலங்கையில் தமிழர்கள் வாழ்வுரிமைக்காகவே ஆயுதம் ஏந்தியுள்ளார்கள்" என்ற இந்திய முன்னாள் புலனாய்வுத்துறை அதிகாரி கார்த்திகேயனின் கூற்றுக்கள் அவரின் மனச்சாட்சியின் பேச்சாகவே கொள்ளத்தக்கது. ஏனெனில் இவர் கடந்த காலத்தில் தான் வகித்த பாத்திரத்திற்கு முற்றிலும் மாறுபாடான பேச்சாகும்.

இலங்கையின் அரசியல் வரலாற்றைப் படித்துள்ள/அறிந்துள்ள எவருமே இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தின் நியாயத்தன்மையைப் புறம்தள்ளி விட முடியாது. அதாவது ஓரளவு மனச்சாட்சியின் பாற்பட்டுச் சிந்திப்பவர்கள் தமிழர் போராட்டத்திற்கான நியாயப்பாட்டை ஏற்றுக்கொண்டே ஆவார்கள்.

தமிழ் மக்கள் அரை நூற்றாண்டிற்கும் மேற்பட்டதான தமது உரிமைப் போராட்ட வரலாற்றில் சுமார் கால் நூற்றாண்டு காலத்திற்கும் மேலாகச் சாத்வீக ரீதியிலான வழியிலேயே போராட்டத்தை நடத்தினர். தமிழ்த் தலைமைகள் பிரச்சினைத் தீர்விற்காக பெரும் விட்டுக்கொடுப்புக்களைக் கூடச் செய்தன. இது தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்ட வரலாறாகவே பதிவுபெற்றது.

இதே சமயம், தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்த பின்னர் கூட, சிங்களத் தலைமைகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவும், இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவும் விட்டுக்கொடுப்புக்களைச் செய்ததையும் எவருமே மறுத்து விட முடியாது. ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்றதன் பின்னர் ஆட்சியில் இருந்த ஒவ்வொரு சிங்களத்தலைமையுடனும் ஒரு தடவையேனும் விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளனர். நடாத்த முன்வந்துள்ளனர்.

இதேவேளை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முற்பட்ட அண்டைநாடான இந்தியா, வேறு உலக நாடுகள் ஆகியவற்றின் விருப்புக்களுக்கும் விடுதலைப்புலிகள் அனுசரணையான நிலைப்பாட்டை மேற் கொள்ளாமல் இல்லை. இந்திய–சிறிலங்கா சமாதான உடன்பாடு திருப்தி அளிக்காத போதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதேபோன்று சர்வதேசத்தின் எதிர்பார்க்கைக்கு ஏற்ப யுத்த நிறுத்தமும் செய்துகொள்ளப்பட்டது. நோர்வே அரசு மேற்கொண்ட சமாதான முயற்சிகளுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கவும்பட்டது. ஆனால், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பதை மட்டுமல்ல தமிழ் மக்களின் மனிதாபிமானப் பிரச்சினையைக் கூடச் சிங்கள ஆட்சி யாளர்கள் தீர்த்துவைக்கத் தயாரில்லை என்பதே யதார்த்த நிலை யாகும். இதனைச் சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள அண்மைய நிகழ்வுகளே போதுமானதாகும்.

சில சமயங்களில் பேச்சுவார்த்தைகளை முறித்துக்கொண்டு விடுதலைப்புலிகள் போரைத் தொடங்கி விட்டார்கள், சமாதான முயற்சிகளுக்கு எதிராகச் செயற்பட்டுவிட்டார்கள் என சிறிலங்கா அரசு தனது அனைத்து வளங்களையும் பிரயோகித்துப் பிரச்சாரம் செய்வதுண்டு. ஆனால், உண்மையில் பேச்சுவார்த்தைகள் அரசால் கைவிடப்பட்ட நிலையிலும்–விடுதலைப்புலிகளினால் ஏற்கனவே யுத்த நிறுத்தம் கைவிடப்படும் என எச்சரிக்கை செய்யப்பட்ட நிலையிலுமே புலிகளால் அடுத்தகட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுண்டு.

அதாவது சமாதான முயற்சிகளில் முன்னேற்றம் எதுவுமின்றி–தமிழ் மக்களின் அபிலாசைகள், உரிமைகள் என்பன தொடர்பான முன்னேற்றகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாத நிலையில், தமிழ் மக்களின் போராட்டத்தை அழித்துவிடும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகையில் பேச்சுவார்த்தை எனக் காலம் கடத்துவது தமிழ் மக்களின் இருப்பை வெகுவாகப் பாதிக்கும் என்ற நிலையிலேயே விடுதலைப்புலிகளினால் அடுத்த கட்ட செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன என்பதே நிதர்சனமானதாகும்.

தவிர விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகள் பயங்கரவாதமானவை. விடுதலைப்புலிகள் போராளிகள் அல்ல. பயங்கரவாதிகள் எனச் சிறிலங்கா அரசால் குற்றம் சுமத்தப்படுவதுண்டு. ஆனால் உண்மையில் விடுதலைப்புலிகளின் மூர்க்கத்தனமான தாக்குதலும், உயிரைப் பணயம் வைத்து மேற்கொள்ளும் துணிகரமான செயல்களுமே இத்தகைய குற்றச்சாட்டுக்களுக்குக் காரணமாகும்.

விடுதலைப்புலிகள் தாக்குதல்களை மூர்க்கமானதாகவும் உயிரைப் பணயம் வைத்தும் மேற்கொள்வதற்கும் காரணம் இல்லாமல் இல்லை. அதாவது தமிழ் மக்களின் குடித்தொகையின் அளவுக்கும் ஒடுக்குமுறையாளரின் குடித்தொகையின் அளவிற்கும் இடையிலான வேறுபாடு மிக அதிகமாகும். இதனால் தீவிரமானதும், அதிசயிக்கத்தக்க வகையிலான வலிமையானதுமான தாக்குதல்கள் மூலமே எமது உரிமைப் போராட்டத்தை வென்றெடுக்கமுடியும். ஆகையினால், தமிழ் இளைஞர், யுவதிகள் போராட்டத்தில் காட்டும் தீவிரம் அதிசயிக்கத்தக்க செயல்கள் என்பனவற்றை பயங்கரவாதம் என்று வரையறை செய்வது தவறான முடிவாகும்.

இவற்றை மனச்சாட்சியுடைய எவருமே புரிந்துகொள்ளமுடியும். அதாவது தமிழ் மக்கள் வேறுவழியின்றியே ஆயுதப்போராட்டத்தில் இறங்கினர் என்பதையும், அவர்கள் தமது இனத்தைப்பாதுகாத்துக் கொள்வதற்காகவே அர்ப்பணிப்புடன் கூடியதான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் என்பதுமே நிதர்சனமானதாகும். சிறிலங்கா அரசும், சில நாடுகளும் கூறுகின்றன என்பதற்காக தமிழ் மக்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாக்கும் நடவடிக்கைகளை எவ்வாறு ஏற்றுக் கொள்ளமுடியும்?

# மக்கள் புரட்சி வெடிக்கட்டும்



எம் உயிரினும் மேலான தமிழீழ மக்களே!

எனக்கு முன்பேசிய ஒரு சில பேச்சாளரின் பேச்சால் தான் நான் பேசவேண்டும் என நினைக்கின்றேன். இது எமது இலட்சியப் போராட்டம் இதை யாரும் கைவிடுமாறு என்னைக்கேட்காதீர்கள். எனது முடிவு எனக்குத் தெரியும் ஏற்கனவே நான் உயிர்வாழ்வது அதிசயமாய் இருக்கின்றது ஏனெனில் நாள் முதல் நான் உண்ணாவிரதம் இருந்ததை விட அதற்கு அடுத்த அடுத்த நாள் மேலும் உற்சாகமாய் இருந்தேன் இன்று அதை விட உற்சாகமாய் இருக்கிறேன். காரணம் நீங்கள் தரும் ஆதரவும் நீங்கள் இந்தப் புரட்சிக்குத் தயாராகி விட்டதும் தான் அதற்காகத்தான் அந்த ஒன்றே போதும் நான் சாகலாம்.

650 பேருடன் 651 வனாக நான் போகிறேன் என்னைப் பற்றி யாரும் வீணாக கவலைப்படாதீர்கள். அலட்டிக்கொள்ளாதீர்கள். ஆனால் நீங்கள் புரட்சிக்குத் தயாராகுங்கள். எனது அவயவங்கள் செயல் இழப்பதை நான் உணர்கிறேன். இனியொரு மனிதனாக என்னால் வாழ முடியாது என்பது எனக்குத் தெரியும். எனவே அது மட்டுமல்ல இது ஒரு இலட்சியப் போராட்டம். எமது வீரர்கள் ஒவ்வொருவரும் கொள்கைக்காக உயிரைக் கொடுக்கக் கூடியவர்கள். அவர்களும் என்னைத் தொடர்ந்து வருவார்கள். அவர்களையும் தடுக்காதீர்கள் நாங்கள் நான்கு ஐந்துபேர் சாவதால் எது வித தீங்கும் ஏற்படாது.மக்கள் புரட்சி வெடிக்கவேண்டும் நான் மூன்று தடவைகள் பேசியிருக்கிறேன். மூன்றுதடவையும் திரும்பத் திரும்ப ஒரே கருத்தைத்தான் கூறுகிறேன். அதற்காகத்தான் சாகிறேன். எனது சாவைப்புரிந்து கொள்ளுங்கள். அது தான் இந்த மக்கள் புரட்சி வெடிக்கட்டும் என்ற ஒரே கருத்ததைத் தான் கூறுகின்றேன். எனவே தயவு செய்து இலட்சியத்தைக்கைவிடுமாறு கேட்கவேண்டாம். நீங்கள் அவ்வாறு கேட்பது இலட்சியத்தை அவமதிப்பது போல் இருக்கும். நாங்கள் சாதாரணமாக ஆள வேண்டும் என்ற ஆசையாலோ வாழவேண்டும் என்ற ஆசையாலோ இயக்கத்துக்கு வரவில்லை எம் தலைவரும் எம்மை அவ்வாறு வளர்க்கவில்லை. எமது இயக்கமும் அவ்வாறில்லை. தயவு செய்து மீண்டும் கேட்கின்றேன் மன்றாட்டமாகக் கேட்கின்றேன் என்மீது கொண்ட அனுதாபத்தின் காரணமாக அவ்வாறு கேட்காதீர்கள். இலட்சியத்தை அவமதிக்காதீர்கள் தயவு செய்து எனக்கு உண்மையில் (சிரிப்புடன்)பெரும் ஆச்சரியமாய்த்தான் இருக்கிறது. ஏறக்குறைய 72 மணித்தியாலங்கள் கடந்து விட்டது. உண்மையில் நான் (சிரிப்புடன்) நேற்றைய விட அதிக உற்சாகமாக இருக்கிறேன். எனது உடல் நிலையைப் புரிந்து கொள்ள முடியவில்லை. ஒரு வேளை அனைவரதும் பிராத்தனையோ எனக்குத்தெரியாது. ஆனால் மீண்டும் மீண்டும் கேட்பது ஒன்றைத்தான். எமது போராட்டம் தொடரப்போகிறது. மக்கள் புரட்சி வெடிக்கப் போகிறது: அந்தப் போராட்டத்திற்கு நீங்கள் தயாராகுங்கள். எனது பேச்சிலேயே நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள். நான் இன்று எவ்வளவு தூரம் உற்சாகமாய் உள்ளேன் என்று.நேற்று என்னால் பேசமுடியவில்லை ஆனால் இன்று (சிரிப்புடன்) தாராளமாகப்பேசமுடிகிறது. ஏனோ தெரியவில்லை. எனவேதான் உங்களிடம் மீண்டும் மீண்டும் கேட்பது நீங்கள் எங்கள் போராட்டத்திற்கு தயாராகுங்கள் அதைத்தான் நான் மீண்டும் மீண்டும் கேட்கிறேன். நீங்கள் போராடுங்கள். நான்மேலே இருந்து நீங்கள் தமிழீழம் அமைப்பதை பார்த்துக்கொண்டிருப்பேன். நான் என்றும் உங்களை விட்டுப்போகமாட்டேன் எங்கள் உடல் மட்டும்தான் போகும் உயிர் என்றும் உங்களோடு ஒட்டியிருக்கும். அதைமறந்து விடாதீர்கள் எம்மைத்தொடர்ந்து எமது தோழர்கள் வருவார்கள் சகோதரிகள் வருவார்கள். அவர்களையும் நீங்கள் தடுக்காதீர்கள். அவர்களுக்கும் வழிவிடுங்கள் நான் ஏற்கனவே பல தோழர்களிடம் கூறிவிட்டேன். நான் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பேன்

> அணு அணுவாக உயிர் பிரிந்துகொண்டிருந்த திலீபனின் நிலையைப் பார்க்கப் பொறுக்காத, நான்கு நாட்கள் பாரதத்தை நம்பி நம்பிக்கையை இழந்த மக்கள், இந்தச்சாவில் இருந்து விடுபடுமாறு கதறி அழுது மேடையில் பேசினார்கள். அந்தச் சந்தர்ப்பத்தில் இலட்சியப்பற்று நிறைந்த திலீபன் அவர்கள் மக்கள் முன் நான்காம் நாள் உரை ஆற்றினார். இதுவே அவரது இறுதிப் பேச்சாகவும் அமைந்து விட்டது.

ஏனையதோழர்களும் அங்கு உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருப்பர். விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கு அவர் இலட்சியம்தான் முக்கியம். உயிர் முக்கியமல்ல அவர்களது வாழ்வு முக்கியமல்ல, சாப்பாடோ தண்ணியோ முக்கியமல்ல அவர்களது இலட்சியம் தான் முக்கியம். அதை நிலைநாட்டத்தான் நான் தலைவரால் முதல் முதலாக நியமிக்கப்பட்டேன். தலைவருடன் சண்டையிட்டுத்தான் இவ் அனுமதியைப் பெற்றேன் எனவே எனக்கு எனது முடிவு தெரியும். எனவே தயவுசெய்து நீங்கள் அலட்டிக்கொள்ளாதீர்கள். தயவு செய்து என்மீது கொண்ட பாசத்தாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ தயவுசெய்து பேச்சாளர் எவரும் இந்தக் கருத்துடன் மேடையில் பேசவேண்டாம். இது என்னை அவமதிப்பது போல் உள்ளது. என்னைத் தண்ணீர் குடிக்குமாறு கேட்பது என்னை அவமதிப்பதுபோல் உள்ளது. நான் அதற்காக இங்கு வந்து இருக்கவில்லை. அதைத்தான் உங்களிடம் மீண்டும் மீண்டும் கேட்கிறேன். உண்மையைச் சொல்கிறேன் எனது மூளைஒன்றையுமே சிரிக்கவில்லை. (சிரிப்புடன்) ஒரு வேளை மூளை மாறாட்டமாய்ப்போய்விட்டதோ எனக்குத் தெரியவில்லை. தயவு செய்து மன்னியுங்கள் நான் ஒரே விடயத்தை திரும்பத் திரும்பச் சொல்வது எனக்குத் தெரிகிறது. தயவு செய்து மன்னியுங்கள் நான்பேசுவதாக இருக்கவில்லை எனக்கு முன்பேசிய பேச்சாளரால்தான் பேசவேண்டி வந்தது. தயவு செய்து இதைத் தவிர்த்து நீங்கள் மக்களை எழுச்சியூட்டும் வகையிலாகப் பேசுங்கள் நான் எந்த இலட்சியத்துக்காகச் சாகிறேனோ அந்த இலட்சியத்தை அடையக்கூடிய வகையில் மக்களை எழுச்சியூட்டும் வகையில் தயவு செய்து பேசுங்கள். அதைத்தான் விரும்புகிறேன். அதைத்தான் மீண்டும் உங்களிடம் நான் கேட்கிறேன். இறுதியாக என் உயிரினும் இனிய மக்களிடம் இருந்து விடைபெறுகிறேன்.

வணக்கம்.

# சு.க.கொள்கைக்கு எதிராக செயற்பட்டால்
# ராஜபக்ஷவுக்கு எதிராக கடும் நடவடிக்கை

### –சனாதிபதி சந்திரிகா நியூயோர்க்கில் தெரிவிப்பு

(நியூயோர்க்)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கொள்கைகளுக்கு எதிராக மகிந்த ராஜபக்ஷ செயற்படுவாரானால் அவருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் நியூயோர்க் நகர ஆசியசங்க மண்டபத்தில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கிளைக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் மத்தியில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மகிந்த ராஜபக்ஷ தனக்கு எதுவும் தெரிவிக்காமல் தொடர்ந்து ஜே.வி.பியுடன் கூட்டு ஒப்பந்தம் செய்துள்ளதை அனுமதிக்க முடியாதெனவும் மகிந்த ராஜபக்ஷவை கட்சியின் சனாதிபதி வேட்பாளராக நியமித்தது தானே என்ற காரணத்தால் அவர் நினைத்தவாறு எந்த தீர்மானங்களோ அல்லது கூட்டு ஒப்பந்தங்களோ செய்ய முடியாதெனவும் அவர் தெரிவித்தார்.

## மகிந்த ராஜபக்ஷவுக்கு அமைப்பாளர்கள் ஆதரவு மறுப்பு

(கொழும்பு)

சனாதிபதி வேட்பாளர் மகிந்தராஜபக்ஷவின் தேர்தல் கூட்டத்திற்கு கிராமியத் தொகுதி அமைப்பாளர்கள் ஒத்துழைப்பு வழங்க மறுத்துள்ளனர்.

கிராமிய மட்டத்தில் அவரின் பிரச்சாரங்கள் மக்கள் மனதைக் கவரவில்லை எனவும், அதே நேரத்தில் நகரங்களில் அவரின் பிரச்சாரங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளதால் கிராமிய மக்கள் பின் தள்ளப்பட்டுள்ளனர் என கிராமிய அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கம்பகா, இரத்தினபுரி கண்டி, பதுளை போன்ற மாவட்டங்களில் இவரின் செல்வாக்கில் வீழ்ச்சி அடைந்துள்ளதாக அங்குள்ள கட்சி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர்.


உன் உதிரம் பிறர்
உயிர் காக்கும்.
இரத்தவங்கி யாழ். போதனா மருத்துவமனை

# "பொங்கு தமிழ்" எழுச்சிக்கு முன்னோடியாக பல்கலைக்கழகத்தில் அரங்க நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பொங்கு தமிழ்-2005 எழுச்சி நிகழ்வுக்கு முன்னோடியாக பொங்குதமிழ் ஏற்பாட்டுக் குழுவும் பெண்கள் பண்பாட்டு மையமும் இணைந்து அரங்க நிகழ்வொன்றை நேற்றுக்காலை பத்து மணியளவில் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடத்தினர்.

இந்நிகழ்வில் யாழ்.குடாநாட்டிலுள்ள பெண் உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். எதிர் வரும்30ஆம்திகதி நடைபெறவுள்ள எழுச்சிப் பிரகடனத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக இந்த நிகழ்வில் கலந்து கொண்ட பெண்கள் கிராமரீதியான எழுச்சிப் பிரகடனத்துக்குரிய தயார்ப்படுத்தலைமேற்கொள்வார்கள் என்றும் அதற்கு முன்னோடியாகவே இந்தநிகழ்வு நடைபெற்றது என்றும்ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவிக்கின்றனர். (28,27)








# தமிழீழ கடற்படையின் துணைப்படை மூன்றாம் அணியின் பயிற்சி நிறைவு

(முல்லைத்தீவு)

மறவன் பயிற்சிப் பாசறையில் தமிழீழ கடற்படையின் துணைப் படைமூன்றாம் அணியின் பயிற்சிகள் நேற்று முன்தினம் நிறைவடைந்தன.

இந்நிகழ்வில் தமிழீழ கடற்படைச் சிறப்புத்தளபதி கேணல்சூசைபொதுச் சுடரினைஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக்கொடியை முதன்மைப் பயிற்சிஆசிரியர் பூவண்ணன் இறக்கி வைத்தார். கேணல் சூசை சிறப்புரை நிகழ்த்தினார்.

இந் நிகழ்வில் கடற்படைத் தளபதிகள் கலாத்தன்,விநாயகம், கடற்புலிகளின் மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூரணி, திலீபன் மருத்துவமனைப் போராளி இசைநிலா, பயிற்சி ஆசிரியர்கள் மற்றும் மக்கள் கலந்து கொண்டனர்.

துணைப்படை வீரர்களுக்கு சிறப்புப் பரிசில்களை கேணல் சூசை வழங்கினார். நான்காவது அணிப் பயிற்சிகள் இன்று தொடங்க உள்ளன.

# இன்று நியூயோர்க் நகரில் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம்

(நியூயோர்க்)

இலங்கைக்கு உதவி வழங்கும் டோக்கியோ இணைத்தலைமை நாடுகளின் கூட்டம் இன்று நியூயோர்க்கில் நடைபெறுகின்றது.

நோர்வே, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் அமெரிக்க நாடுகளின் பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் பங்கேற்கவுள்ளனர்.

இதில் இலங்கையின் தற்போதைய சூழல் குறித்து விவாதிக்கப்படவுள்ளது. யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துகின்ற அமைதிப்பேச்சுக்களை எங்கு நடாத்துவது என்பதில் முட்டுக்கடை ஏற்பட்டுள்ள நிலையில் கூட்டப்பட்டுள்ள இக் கூட்டம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

இக் கூட்டத்தின் முடிவுகளையடுத்துநோர்வேயின் விசேடதூதுவராக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் முன்னாள் தலைவரான ட்ரொண்ட்புறூவ் ஹொவ்டே தனது இலங்கைப் பயணத்தை மேற்கொள்வார் என்று நோர்வே தகவல் தெரிவிக்கின்றன.

# தொலைக்காட்சி விவாதத்திற்கு மகிந்த ராஜபக்ஷ மறுப்பு

சிறிலங்காசனாதிபதித் தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுடனான நேரடி விவாதங்களைச்சந்திக்க சுதந்திரக் கட்சி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷ மறுத்துவிட்டார். 'சிரச' தொலைக் காட்சி நிர்வாகம் இது தொடர்பாக இருவேட்பாளர்களின் விவாதங் களையும் மூன்று பிரிவாக நேரடி ஒலிபரப்பு செய்யத்திட்டமிட்டிருந்தது. இது தொடர்பாக ரணில்விக்கிரம சிங்கவிற்கும். மகிந்த ராஜபக்ஷ விற்கும் முறைப்படியான கடிதத்தையும் அந்நிர்வாகம் அனுப்பிவைத்தது தான் இந்த விவாதத்தில் பங்கேற்பதாக ரணில்விக்கிரம சிங்க,சிரச தொலைக்காட்சியினருக்கு பதில் அனுப்பினார். ஆனால் மகிந்த ராஜபக்ஷ அதை நிராகரித்துவிட்டார்.

சுதந்திரக்கட்சியில் ஏற்பட்டுள்ள உள்முரண்பாடுகள்,ரணில்விக்கிரம சிங்கவின் தொலைநோக்கான பொருளாதார ,சமூக செயற்றிட்டங்கள் ஆகியவற்றை தன்னால் எதிர் கொள்ள இயலாத நிலையிலேயே மகிந்தராஜபக்ஷ இம்முடிவை மேற் கொண்டதாக கூறப்படுகின்றது.

# கதிர்காமரின் இடத்தை நிரப்ப வலியுறுத்தல்


லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையினால் வெற்றிடமாகியுள்ள பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்காக வேறொரு உறுப்பினரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு தேர்தல் ஆணையாளர் தயானந்ததிசாநாயக்கவை பாராளுமன்ற செயலாளர் பிரியானி விஜேசேகர கேட்டுக் கொண்டுள்ளார்.

அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு மக்கள் சுதந்திரக் கூட்டணி தேசியப்பட்டியலிலிருந்து ஒரு உறுப்பினரை நியமிக்குமாறு தான் தேர்தல் ஆணையாளருக்கு எழுத்து மூலம் தெரிவித்திருப்பதாகவும் பாராளுமன்ற செயலாளர் கூறினார்.

# கிளிநொச்சி சர்வதேச பாடசாலையில் முதலாம் வருட கலை நிகழ்வுகள்

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி சர்வதேச பாடசாலையின் மாணவர்களுக்கான முதலாம் வருடாந்த கலை நிகழ்வுகள் நேற்று இடம் பெற்றன. அவுஸ்திரேலியா நாட்டின் ஆசிரியர் "கெட்" தலைமையில் பி.ப.3.00 மணியளவில் இந்நிகழ்வு இடம் பெற்றன.




ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரினை பிரதம விருந்தினரான கிளி.மாவட்ட கல்விப்பணிப்பாளர் குருகுலராசா பாடசாலைப்பணிப்பாளர் ராஜகோபால் ஆகியோர் ஏற்றிவைத்தனர். தொடர்ந்து தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ நிர்வாக சேவையைச்சேர்ந்த இளஞ்சேரன் ஏற்றிவைத்தார். ஆரம்ப நிகழ்வுகளைத் தொடர்ந்து மாணவர்களின் கலை நிகழ்வுகள் பாடசாலையின் அரங்க மண்டபத்தில் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டு நிகழ்வினை சிறப்பித்தனர். (தீ)

# வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்க பாதாளக்குழுக்கள் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு ஆதரவு வழங்க பாதாள உலகக் கும்பல்களிற்கு இடையே போட்டி உருவாகியுள்ளதாக படையினர் தகவல் வெளியிட்டுள்ளனர்.

முன்னணியிலிருந்து வரும் இவ்வாறான பாதாள உலகக் கும்பல்களின் உறுப்பினர்கள் பலர் பலதரப்பட்ட மட்டத்திலான அரசியல் வாதிகள் மூலம் இரு முதன்மை அரசியல்கட்சிகளுக்குள்ளும் நுழைந்துள்ளதாக சிறிலங்கா உளவுப்பிரிவு தெரிவித்துள்ளது.

சில பாதாள உலக தலைவர்கள் மிகத் தந்திரமாக தமது உறுப்பினர்களை இரு கட்சிகளுக்கும் ஒரே முறையில் ஆதரவு வழங்க ஈடுபடுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.சனாதிபதித் தேர்தலின் பின்னர் அதிகாரத்திற்குவருபவர் மூலம் தற்போது செயல்பட்டு வரும் பாதாளஉலகக்கும்பல்களிற்கு எதிராகமேற்கொள்ளப்படும் விசாரணைகளை தவிர்த்துக் கொள்வதே இவர்களின் அடிப்படை நோக்கமாகுமென படைத்தரப்பினர் மேலும் தெரிவிக்கின்றனர்.

## அதிதிகள்..

தரப்புகள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

கட்டுநாயக்க வானூர்தி தளத்தின் அதியுயர் பாதுகாப்புக்கு மத்தியில் இவ்வாறான சம்பவம் ஏற்பட்டுள்ளமை குறித்து விசாரணைகள் தற்சமயம் இடம்பெற்றுவருகின்றன.

## சிறிலங்கா..

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு தலைமை வகிக்கும் பிரித்தானியா விடுதலைப்புலிகளை தடை செய்துள்ளது போல் ஏனைய நாடுகளும் விடுதலைப்புலிகளை தடை செய்ய வேண்டுமென பிரித்தானியா ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிடம் வலியுறுத்த வேண்டும் என்றும் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

இதனிடையே ஆசிய சமூகத்தினர் அமைப்பு நிர்வாகிகள் பிரஸ்ஸல்ஸ்சில் கடந்தபுதன்கிழமை ஐரோப்பிய ஒன்றியநாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்து தமிழீழ விடுதலைப்புலி கள் மீது நடவடிக்கை எடுக்கத் தேவையில்லை என்று வலியுறுத்தினர். இலங்கைப் பிரச்சினையில் அனுசரணையாளராக உள்ள நோர்வேயும் அமைதிப் பேச்சுக்கள் மீள நடைபெறும் நிலையில் விடுதலைப் புலிகளுக்கெதிராக தடை நடவடிக்கை தேவையில்லை என்றும் வலியுறுத்தியது. இதைத்தொடர்ந்து தமிழீழ விடுதலைப்புலிகளுக்கெதிராக நடவடிக்கை மேற்கொள்வதை ஐரோப்பிய ஒன்றியம் ஒத்திவைத்துள்ளது.

அடுத்த வார நடுப்பகுதியில் ஐரோப்பிய ஒன்றியத்தின் உத்தியோகபூர்வ முடிவு அறிவிக்கப்படவுள்ளதாக தெரியவருகின்றது.

இதேவேளை சிறிலங்கா அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை ஐரோப்பிய ஒன்றியம் நிராகரித்துள்ளமை இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள மிகப்பெரிய பின்னடைவு என்று சுட்டிக் காட்டப்படுகின்றது. (32)

## மகிந்த...

நிறுத்துவதற்கும் சனாதிபதி ஆலோசித்து வருவதாக தெரிய வருகின்றது.

எனினும் சுதந்திரக்கட்சியின் புதிய சனாதிபதி வேட்பாளராக அநுரா பண்டாரநாயக்காவை நிறுத்தவேண்டாம் என்று சனாதிபதிக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் இத்னை அடுத்து சுதந்திரக் கட்சியின் சார்பில் புதிய வேட்பாளர் ஒருவரை நிறுத்துவது தொடர்பாகசனாதிபதி ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

மகிந்த ராஜபக்ஷ சுதந்திர கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டால் ஜே.வி.பியின் சார்பில் சனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.

எனினும் தமது கட்சியின் சார்பில் மகிந்த ராஜபக்ஷ போட்டியிடலாம் என்று ஏற்கனவே ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ள நிலையில் மகிந்த ராஜபக்ஷவிற்கு இந்த விடயத்திலும் நெருக்கடி நிலை ஏற்படலாம் என்று எதிர்வு கூறப் பட்டுள்ளது. (32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.